# புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ ஜூன் ௴ 19 ௳ [ந. 151

**பிரஸங்கம் CLI.**

## ஐக்கிய தேசத்தார்களின் கொடி விழா—14-6-43.

### (ஸ்ரீ-அட்மினிஸ்ட்ரேட்டர் அவர்களின் பிரசங்கம்).

**சீமாட்டிகளே! சீமான்களே !!**

ஒரு வருஷத்துக்குமுன் நான் உங்கள்முன் பேசும்போது இருந்ததைவிட இப்பொழுது அளவு கடந்து பிரகாசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்போது உங்களுக்கு நான் தைரியம் புகட்டவேண்டியதாக இருந்தது. நிகழ்ச்சிகளையும் விருத்தாந்தங்களையும் எவ்வளவு பெரியவையாகவிருந்தாலும் கவனியாது, சம்பவங்களின் நெடும்போக்கையும், பின்னால் என்ன நடக்கலாம் என்பதையும் தீர்க்காலோசனை செய்யுங்கள் என்று சொன்னேன். எனக்கிருந்த நம்பிக்கை வீண்போகவில்லை என்பதை பின் நடப்புகளிலிருந்து நீங்கள் இப்பொழுது தெரிந்துகொண்டீர்களென்று நினைக்கிறேன். யுத்தத்தின் ஆரம்ப காலத்தில் பிரிடன் அச்சுநாடுகளோடு தன்னந்தனியே நின்று போரிடவேண்டியிருந்தது. நாங்கள் ஆயத்தமாகவே இல்லை. ஆனால் ஜெர்மனியோ பல வருஷங்களாக ஏராளமான யுத்த தளவாடங்களையும், எண்ணிறந்த ஆள்பலத்தையும் திரட்டி வைத்திருந்தது. மிகப் பெரியதான விமானப்படையையும், வலுத்த நீர்மூழ்கிக் கூட்டத்தையும் அது வளர்த்து வைத்திருந்தது. பிரான்ஸ் வீழ்ந்துபடுத்தது. நார்வே, டன்கார்க் போன்ற சிறி நாட்களும் இருந்தன. ஐரோப்பாவில் ஒன்றன்பின் ஒன்றாக தேசங்கள் கைப்பற்றப்பட்டன.

2. பிரிடிஷாரின் விடாப்பிடியாலும் மனவுறுதியாலும் பிரிடனைக் கைப்பற்றுவதற்காக நடந்த யுத்தத்தில் நமக்கு ஜயம் கிடைத்தது. எனினும் ஜெர்மனி மேலும் மேலும் தேசங்களைக் கைப்பற்றிக்கொண்டேபோனது. அதன்மேல் ருஷ்யாவையும் ஹிட்லர் தாக்கினான். இதனால், எவராலும் தோற்கடிக்க முடியாத ருஷ்யா தேசம் யுத்தத்தில் நமது பக்கத்தில் சேர்ந்துகொண்டது. இதற்கு நம் வந்தனம் கார்பொரல் ஹிட்லருக்கே உரியதாகும். அவன் செய்த பல பிசகுகளுக்கும் அவனுக்கு வந்தனம் அளிக்கவேண்டுமென்று Mr. சர்ச்சில் சொல்லியிருக்கிறார். அதன்மேல், ஜப்பானின் முட்டாள்தனத்தாலும் துரோகத்தாலும் அமெரிக்காவும் யுத்தத்தில் கலந்துகொண்டது. ஐந்தாம்படையைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலொழிய ஏனைய சத்திய ஓராங்கானிக் கொள்கைக்காரர்கள்கூட இதற்கு ஆக்ஷேபிக்க முடியவில்லை. இதேபோல் சைனாவையும் ஜப்பான் வலுவில் சண்டைக்கு இழுத்து வருஷக்கணக்காக வெற்றியில்லாமல் சண்டை போட்டுவருவதினால் சைனாவும் சகஜமாகவே நமக்கு நேசதேசமாயிற்று. இன்று நான் ஏற்கனவே சொன்ன மாதிரி நேசதேசங்களாகிய நாம் பிரகாசமான எதிர்காலம் நம் எதிரே நிற்க, இப்போது ஒன்றுபட்டு இருக்கிறோம். சுருங்கச்சொல்லின் எங்கு பார்த்தாலும் நேசதேசங்கள் எதிர்த்து முன்னேறுவதும் அச்சுநாடுகள் தற்காப்பில நிற்பதுமான நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. சில மாதங்களுக்கு முன்னால் இருந்த நிலைமையிலிருந்து எவ்வளவு மாறுதல், பாருங்கள்!

சண்டைக்கிழுத்த அச்சுநாடுகளை நசுக்கிவிடுவதையே பொதுக் காரியமாகக்கொண்டு, உலகத்தில் மேம்பட்ட வலுவுள்ள நேசதேசங்கள் நான்கும், இவர்களுக்கு உதவியாக மற்ற தேசங்களும் நிற்பதனுல்தான் நாம் இப்போது சாதகமான நிலைமையை அடைந்திருக்கிறோம். இத்தகைய நல்ல நிலைமை ஏற்பட்டு இருப்பதைக் கொண்டாடு வதற்காகவே நாம் இங்கே கூடியிருக்கிறோம். இன்றையதினம் "ஐக்கிய தேசத்தார் களின் கொடி விழா". ஐக்கிய தேசத்தார்கள் அடைந்துள்ள வெற்றியினல் இந்த தினத்திற்கு ஒரு விசேஷம் ஏற்பட்டிருக்கிறது.

3. தூரக் கிழக்கில் ஜப்பானியர் ஒரு காலத்தில் வெகு மும்முறமாக முன்னேறி ஞர்கள். என்றாலும், சில காலமாக அதற்கு ஒரு முட்டுக்கட்டை ஏற்பட்டுவிட்டது. கிழக்கு ஆசியாவில் சைன தைரியமாகச் சமாளித்து நிற்கிறவிடங்களில் ஐக்கிய தேசங்களின் படைகள் முன்னேறிவருகிறதுமல்லாமல் ஜப்பான் பின்வாங்கும்படியும் ஏற்பட்டுவிட்டது. பஸிபிக்கில் அமெரிக்கப் படைகள் இடைவிடாது ஜப்பானிய நிலயங்களை நிர்தூளியாக்கி வருகின்றன. வட ஆபிரிக்காவைவிட்டு, பிரிடிஷ், பிரெஞ்சு, அமெரிக்கத் துருப்புகள் எதிரியை பூண்டில்லாமல் ஒழித்துவிட்டன. ருஷ்யாவில் தரையிலிருந்தும் ஆகாயத்திலிருந்தும் ஜேர்மன் அணி வகுப்புகள் பீரங்கி வெடிக்கு இறையாக்கப்பட்டுவருகின்றன. ஐக்கிய தேசங்களின் எதிரியை நாசமாக்கக் கூடிய சக்தி எவ்வளவு தூரம் பெருகியிருக்கிறதென்பதை ஜேர்மனி, இதாலி, ஜப்பான் இவர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட தேசங்களிலுள்ளவர்கள் உணர்ந்து வருகிறார்கள்.

4. சைனவில் ஜப்பானியர்களை முன்னேறவொட்டாமல் தடுத்திருப்பதுமட்டு மல்ல. அவர்கள் பின்வாங்கும்படியும் தாக்கியடிக்கப்பட்டிருக்கிறார்கள். அமெரிக்க உதவிவந்து பாய்வதால் சைனவுக்கு வரவர அதிக சாதகம் ஏற்பட்டு, முக்கியமான பலம் படைத்த மர்ம ஸ்தானங்களை அவர்கள் கைப்பற்றி இருக்கிறார்கள். அவைகளில் இட்டு (Itu) ஒன்று. இவ்விடத்திலிருந்து ஜப்பானியர் தூரத்தப்பட்டுவிட்டார்கள். இச்சாங் (Ichang) உயிர்நிலைபோன்ற மற்றொரு இடம். மத்திய சைனவில் பெரிய ஜலவசதியான யாங்ட்ஸி (Yangtse) நதியின் இரு கரைகளிலிருந்தும் இச்சாங்கை (Ichang) சைனக் காரர்கள் இப்போது தாக்கிவருகிறார்கள். சென்ற இரு வாரங்களில் மத்திய சைனவில் ஜப்பானியருக்கு ஏற்பட்ட படுதோல்வியிலிருந்து சைனவுக்கும் ஜப்பானுக்கும் ஆறு வருஷ காலமாக நடந்துவந்த யுத்தத்திற்கு புதிய தோற்றம் உண்டாகியிருக்கிறது. சைனவின் சைனியங்களுக்கு 14-வது யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆகாயப்படை ஆதரவு அளித்துவருகிறது.

5. வட பஸிபிக்கில் அலூஷியன் (Aleutian) தீவுகளில் சிலவற்றை ஜப்பானியர் கைப்பற்றி இருந்தார்கள். அவற்றில் அட்டு (Attu) தீவிலிருந்து அவர்களைத் தூரத்தி விட்டு அமெரிக்கப்படை அதைக் கைப்பற்றிக்கொண்டது. அடுத்தபடியாக அமெரிக்கா வின் தாக்குதலுக்கு கிஸ்கா (Kiska) தீவு இலக்காகியிருக்கிறது. கிஸ்காவை ஆக்கிரமித்து விட்டால் அதைத் தளமாக வைத்துக்கொண்டு ஜப்பானியரின் மூலஸ்தானம் தாக்கப் படும். தெற்கு பஸிபிக்கில் ஆஸ்திரேலியாவுக்கு வடக்கே ஒரு வட்டமிட்டதுபோன்ற சில தீவுகளில் தங்கள் படைகளை ஜப்பானியர் பலப்படுத்தி வைத்திருக்கிறார்களென்பது உண்மையே. அவர்களை வாபஸ் வாங்கும்படி செய்வதற்கோ, அல்லது அவர்களை அக்கக்காகப்பிரித்துப் பிற்பாடு ஒழிப்பதற்கோ தேவையான யோசனைகளைச் செய் திருப்பதாக நமக்கு உறுதி கூறப்படுகிறது. ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து விமானப் படைகள் மேற்படி தீவுகளிலுள்ள ஜப்பானிய தளங்களை பலன்படத்தக்கவிதமாய் தாக்கிவருவதாகத் தெரிகிறது.

6. வட ஆபிரிக்காவில் பிரிடிஷ், அமெரிக்க பிரெஞ்சுப் படைகள் ஒத்துழைத்து வியக்கத்தக்க விதமாக அச்சுநாட்டுத் துருப்புகளைத் தாக்கினதால், அவைகளுக்கு ஏற் பட்ட ஆபத்தைப்பற்றி உங்களுக்கு எல்லாம் தெரியும். வட ஆபிரிக்காவில் காயம் பட்டதும் இறந்ததும் வெகுவாரிப்பேர். இதை வின, அச்சுநாட்டார்கள் 2,48,000 பேர்கள் கைது செய்யப்பட்டதாகக் கணக்கிடப்படுகிறது. ஏராளமான தளவாடங்கள் கைப்பற்றப்பட்டன. பிஸர்ட்டா, டூனிஸ் கோட்டைகள் வைத்தது வைத்தாப்போல் நம் வசமாயின. ஜேர்மானியரின் துணிவு தளர்ச்சி அடைந்தது. வட ஆபிரிக்காவிலிருந்து அச்சுநாட்டைக் கிளப்பிவிட்டபின், மத்தியதரைக் கடலிலுள்ள ஸிஸிலி, சார்டினியா

தீவுகளை நொறுக்குவதில், பிரிடிஷ், அமெரிக்க, பிரெஞ்சு துருப்புகள் தமது முழு கவனத்தையும் செலுத்தி வருகிறார்கள். நமக்கு மால்டா எப்படியோ அதைப்போல் சிறிய அளவில் முஸோலினிக்கு பான்ட்டெல்லேரியா (Pantellaria) ஏற்பட்டிருந்தது. அதை அடித்த அடியில் அது சரண் அடையும்படி ஆகிவிட்டது. அதை முற்றுகை போட்டு மறு பேச்சில்லாமல் தஞ்சம் அடையும்படி அதற்கு முடிவு சொல்லப்பட்டது. அது சம்மதிக்கவில்லை. ஆனால் நேசதேசப்படைகளின் தாக்குதலைத் தாங்கமுடியாமல் இரண்டே நாளில் சரண் அடைந்தது. இதாலிய கப்பற்படையோ வழக்கம்போல் துறைமுகங்களில் நமது வெடிகுண்டு விமானங்களுக்கு இரையாகிப் பதுங்கிக்கிடக்கின்றன. இதாலியின் மூலஸ்தானத்தில் முக்கியமான ராணுவ மத்திய நிலயங்கள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டு வருகின்றன. வட ஆபிரிக்காவில் பலத்த இதாலிய சாம்ராஜ்ஜியத்தை ஸ்தாபித்துவிடவேண்டுமென்ற முஸோலினியின் கனவு பறந்துபோய் விட்டது. இதாலியைக் கைவிடாமல் வைத்துக்கொள்ளுவதே அவருக்கு இனிமேல் பெரும்பாடாகிவிடும். ஐக்கிய தேசங்களின் கடற்படையும், விமானப் படையும், நிலப்படையும் ஐரோப்பாவில் இறங்குவதற்குத் தயாராக வட ஆபிரிக்காவில் குவிந்து கொண்டிருக்கின்றன. மால்டாவில் இப்போது விமானத்தாக்குதல் பயம் இல்லை. அதை விமான தளமாகவைத்துக்கொண்டு இதாலி, ஸிஸிலி இவற்றை விமானங்களால் தாக்கி அழிக்க முடியும். இந்தியாவை மேற்குப் புறத்திலிருந்து படையெடுப்பதென்ற பயமுறுத்தல் மறைந்துவிட்டது.

இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் நெருங்கின கடல் மார்க்கமான மத்தியதரைக் கடலில் நேசதேசக்கப்பல்கள் இனிக் கூசாமல் போகலாம். இதனால் நமது கடல் படைகளுக்கு ஏற்பட்டிருந்த சிரமம் வெகுவாய்க் குறைவுபடும்.

7. ருஷ்யாவில் ஜெர்மானியர்கள் முன்னேறவில்லை. கோடைகாலத்தில் ருஷ்யாவை ஒரே அடியாய் அடித்துவிடலாமென்று ஜெர்மானியர் மனப்பால் குடித்தார்கள். கோடையும் தாண்டிப்போகலாயிற்று. சரேலென்று புகுந்து ஒரே பிடியாய் அமுக்கிவிடலாமென்ற நோக்கத்துடன் தங்கள் பலங்களை ஜெர்மானியர் திரட்டிவைத்திருந்தார்கள். ஆனால் இப்போது ஐரோப்பாவை மேற்கிலும் தெற்கிலும் வடக்கிலும் ஐக்கிய தேசத்தார்கள் படையெடுத்துவிடுவார்களோவென்ற பயத்தில் ஹிட்லர் இருப்பதால், ருஷ்யர்கள் முன்னையும்விட உறுதியாய் இடம் விட்டுக்கொடுக்காமல் சண்டை செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஜெர்மனியின் கைத்தொழில் சாலைகளையும், ராணுவ நிலயங்களையும் ராணுவ விமானப்படை நிர்மூலமாக்கி வருகிறது. சமீபத்தில் அந்த ராயல் விமானப்படையார் ஜெர்மனியில் இரண்டு முக்கியமான அணைகளின் மீது வெடிகுண்டு வீசி அவற்றை உடைத்துவிட்டார்கள். அதனால் கைத்தொழில் சாலைகள் அமைக்கப்பட்ட ஏராளமான இடம் வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்யும் தொழில் பெருங்குறைவு அடைந்துவிட்டது.

8. ஜெர்மனியின் மீதும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரெஞ்சு தேசத்தின் மீதும், ராயல் விமானப்படையும் அமெரிக்க விமானப்படையும் இரவு பகல் ஓயாது ஏராளமாகச் சென்று தாக்கிவருகின்றன. அவற்றைப் படைக்கூட்டங்களாகத்தான் கணக்கிடமுடியும். யுனைடெட் ஸ்டேட்ஸ் மாத்திரம் மாதம் ஒன்றுக்கு 6,000 விமானங்களுக்கு மேல் தயார் செய்கிறது. நேசதேச விமான தளங்கள் ஐஸ்லாந்தின் பாரைச் சரிவுகளிலிருந்து எகிப்தின் மணல் வெளிகள் வரையில் வியாபித்திருக்கின்றன. இப்போது விமானங்களைக்கொண்டு ஜெர்மனியைத் தாக்குவதுபோல அவ்வளவு தொடர்ச்சியாகவும் பளுவாகவும் எக்காலத்திலும் தாக்கினதில்லை. இதனோடு ஒப்பிட்டுப் பார்த்தால் பிரிடனின் பேரில் ஹிட்லர் செய்த விமானத்தாக்குதல் சிறுபிள்ளைகள் விளையாட்டென்றே சொல்லவேண்டும். சென்ற யுத்தத்தில் போலவே ஜெர்மனி தன்னுடைய யூ-படகுகளின்மீது நம்பிக்கை வைத்திருந்தது. சென்ற யுத்தத்தைப் போலவே அந்த மயக்கம் தெளிந்து போக நேரிடும். நம்பிக்கைக்கு மாறாக அந்த யூ-படகுகள் இப்போது சண்டையில் அபஜயம் அடைந்து வருகின்றன. நேசதேசங்களின் யுத்தக் கப்பல்களும் விமானங்களும் யூ-படகுகளை எதிர்க்கும் உபாயங்களை அதிகரித்து வருவதின் பலனாக, சமீபத்தில் யூ-படகுகள் அதிகம் கவிழ்ந்து வருகின்றன. யூ-படகுகளைக் கட்டும் நிலயங்கள் இடைவிடாது வெடிகுண்டுகளுக்கு இரையாகி சேதப்பட்டிருப்பதால் யூ-படகுகளின் உற்பத்தி குறைந்திருக்கிறது. யூ-படகுகளினால் நேசதேசக் கப்பல்

களுக்கு ஏற்படும் சேதமும் குறைந்து வருகிறது. நேசதேசங்களின் கப்பல்களுக்கு ஏற்பட்ட நஷ்ட ஈட்டிற்குத் தேவையானதற்கு மேலும், ஜெர்மானியர்கள் சொல்லிக் கொள்ளுவது போல் அவ்வளவு அளவுமீறின நஷ்டம் நேர்ந்ததாக வைத்துக்கொண்டாலுங்கூட, அதை ஈடு செய்வதற்குத் தேவையானதற்கு மேலும் புதிதாகக் கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நேசதேசங்கள் முன்னைவிட இரண்டு பங்கு துரிதமாகக் கப்பல்களைக் கட்டி வருகிறார்கள். அமெரிக்க கப்பல்படை முன்னைவிட இரண்டு பங்காகி இருக்கிறது. ஐக்கிய தேசங்கள் முன்னைவிட அதிகமாக நீர்மூழ்கிகளையும் தயாரித்து வருகிறார்கள். யூ-படகுகளின் பயம் அடியோடு ஒழியவில்லையென்றாலும் முன்போல் அவற்றைப்பற்றி அவ்வளவு கவலை இல்லை. ஆனால், அந்த பயம் முற்றிலுமே ஒழிந்து போவதற்கு வெகுகாலம் செல்லாது. பஸிபிக்கில் ஜப்பானியர்களுக்கு யுனைடெட் ஸ்டேட்ஸ் நீர்மூழ்கிகளால் தொந்திரவு அதிகம் உண்டு. ஜப்பானியர்களுக்குக் கப்பல் இல்லாமல் தத்தளித்துக்கொண்டிருப்பதாக தகுந்த சாக்ஷியங்களிலிருந்து தெரியவருகிறது.

**9.** இந்தப்படி நேசதேசங்களுக்கு வெற்றி கிடைத்திருப்பதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் இல்லாமல் போகவில்லை. பிரெஞ்சுக்காரர்கள் சண்டை நிறுத்தம் செய்த நாள் முதல் அலெக்ஸாண்டிரியாவில் ஒய்ந்துகிடந்த பிரெஞ்சுக் கப்பற்படை இப்போது தானாகவே நேசதேசங்களுடன் வந்து சேர்ந்துகொண்டு இருக்கிறது. தென் அமெரிக்காவில் ஆர்ஜண்டினாவில் நேசதேசங்களின் சார்பாகவுள்ள கட்சியைச் சேர்ந்தவர்கள் அச்சு நாடுகளின் சார்பாகவுள்ள பிரஸிடெண்டுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து ஜயித்துவிட்டபடியால், அந்தப் பிரஸிடெண்டு ராஜீனமா செய்துவிட்டு உருகுவே (Uruguay) தேசத்திற்கு ஓடிவிட்டார். ஆர்ஜண்டினாவில் (Argentina) இப்போதுள்ள மந்திரிசபை நடுநிலைமை வகிப்பதாக இது சமயத்தில் சொல்லிக்கொண்டாலும், நிச்சயமாய் அது நாடுகளுடன் சேராது. பிரெஞ்சு தேசத்தில் தேசாபிமானமுள்ள கிளர்ச்சிக்காரர்களால் ஹிட்லரின் யுத்த இயந்திரம் திகைத்து நிற்கிறது. ஆயிரக்கணக்கான ரயில் வண்டிகளும், நூற்றுக்கணக்கான லாரிகளும் அழிக்கப்பட்டன. விரோதியின் கிடங்குகளும், ஆலைகளும் நூற்றுக்கணக்கில் அழிக்கப்பட்டு வேலைக்கு இலாயக்கில்லாமல் போயின. ஜெர்மன் சிப்பாய்கள் கிளர்ச்சிக்காரர்களால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஜெர்மனியின் ஆள் கட்டு குறைந்துவிட்டது. கிளர்ச்சிக்காரர்களால் போடப்பட்ட வெடிகுண்டுகள் டென்மார்க்கில் (Denmark) ஒரு பெரிய சிமிண்டு உற்பத்தி சாலையில் வெடித்ததன்மூலம் அத்தேசத்தில் வெகு இடங்களில் அந்த இயந்திரங்களின் உடைந்த சில்லுகள் சிதறிக்கிடந்தன. ஹாலந்தில் (Holland) பெருங்கலகங்கள் நேர்ந்தன. ராணுவ ஆட்சி ஏற்பட்டது. ஆகவே ஒவ்வொரு இடத்திலும் நமக்குச் சாதகமான நிலைமை ஏற்பட்டுக்கொண்டுவந்திருக்கிறது. முடிவில் வெற்றி நமக்குத்தான்; அதுவும் கண்முன்னால் நிற்கிறது.

**10.** ஆனால், இன்று நாம் விசேஷமாக எடுத்துச் சொல்லவிரும்புவது என்னவென்றால், நேசதேசங்கள் தங்களுடைய லக்ஷியங்களிலும், ஒரே அச்சுத் திட்டமாய் இருக்கிறார்கள் என்பதே. அச்சு நாடுகளின் நிலைமையையும், பரஸ்பர பான்மையையும் கவனியுங்கள். ஜெர்மனி ஜயிக்கவேண்டுமென்று ஜப்பானுக்கு உண்மையில் மனமார்ந்த சம்மதம் இருக்குமா? அல்லது ஜப்பான் ஜயிக்கவேண்டுமென்று ஜெர்மனிக்கு எண்ணம் உண்டா? இல்லை. தன்னுடைய லக்ஷியங்கள் கைகூடுவதற்காக அவைகள் ஒவ்வொன்றும் மற்றொன்றைப் பயன்படுத்திக்கொள்ளுகிறது. நார்டிக் (Nordic) ஜாதியினரே மனிதவர்க்கத்தில் மேன்மையானவர்கள் என்ற மூடத்தனமான கொள்கையைப் பிடிவாதமாக ஏற்றுக்கொண்டு, கீழ்தேச மக்களைக் கேவலமாக நினைக்கும் ஜெர்மனிக்கு ஜப்பானுடன் பொதுவான லக்ஷியம் என்ன ஏற்படக்கூடும்? அவைகள் ஒவ்வொரு தேசமும், பூலோகம் முழுவதையும் தானே ஒரு குடைக்கீழ் ஆளமுடியுமென்று, இப்போதில்லாவிட்டாலும் ஒரு காலத்தில் ஆசைப்பட்டு எதிர்பார்த்தது உண்டு. இதாலிக்கோ, நேசதேசங்கள் வெற்றிபெற்றால் தான் சுயேச்சையுடன் அது தனிப்பட்ட ராஜ்யமாக இருக்கமுடியுமென்று தெரிந்திருக்கவேண்டும். ஜெர்மானியர்களால் யுத்தத்தில் இழுக்கப்பட்டு, ருஷ்ய முன்னணியில் பலி கொடுக்கப்பட்ட சில்லரை தேசங்களுக்கு ஜெர்மானியர் யுத்தத்தில் ஜயிப்பதால் என்ன லாபம் கிடைக்கக்கூடும்? ஜெர்மானியர் தம் வசப்படுத்திக்கொண்ட தேசங்கள் அதன் கொடுங்

கோன்மையில் சிக்கிக்கொண்டு அதினின்றும் விடுதலைபெறுவதற்கான மார்க்கங்கள் புகைந்தவண்ணமாய் இருக்கின்றன. ஆனால், நேசதேசங்கள் ஒவ்வொன்றிற்கும் ஜெர்மனியும், ஜப்பானும் மடிவதால் பொதுவாக நன்மை ஏற்படும். அவை தன்னலங் கருதி இந்தச் சண்டையில் இறங்கவில்லை. மனுஷ்யத் தன்மைக்கும், மனித சமூகத்திற்கும் சரித்திரத்தில் என்நாளும் நடந்திராத இந்தக் கொடுமை ஒழிந்துவிடவேண்டுமென்பதற்காக அவை சண்டைபோடுகின்றன. யுத்தத்திற்குப் பிறகு மற்ற தேசங்களோடு ருஷ்யாவும் சேர்ந்துகொள்ளும் என்பதற்கு அறிகுறியாக Comintern இப்போது கலைக்கப்பட்டுவிட்டது.

**11.** எதிர்காலம் இப்போதைவிட பிரகாசமாக எப்போதும் இருந்ததில்லை. ஆனால் யுத்தம் இன்னும் ஜயித்து முடிந்தபாடில்லை. யுத்தத்தைப்பற்றி இனிமேல் நாம் கவலைப்படவேண்டியதில்லை என்று ஒருவரும் நினைக்கக்கூடாது. போர்முனையில் இருப்பவர்கள் பலமாகச் சண்டைபோடவேண்டியிருக்கும். வீட்டில் இருப்பவர்களுக்குப் பிரிவாற்றுப் பெருந்துயரம் இருக்கத்தான் இருக்கும். நாம் நினைக்கிறபடியெல்லாம் நடக்குமென்று சொல்லமுடியாது. முன்வைத்த காலைப் பின் வைக்க வேண்டியிருக்கலாம். ஆனால் முடிவு நிச்சயம். ஆகவே, நம்மில் ஒவ்வொருவரும் நேசதேசங்களின் கட்சியில் இயன்றதைச் செய்துகொண்டே வருவோம். விஷமப் பிரசாரங்களையும், அதிக லாபம் சம்பாதித்தல், அத்து மீறி சேமித்துவைத்தல் ஆகியவற்றைப்பற்றி அதிகாரிகளுக்குத் தெரிவிப்பது, (இதை ஜனங்கள்தான் செய்யக்கூடும். பொதுஜன ஒத்துழைப்பில்லாமல் கையளவு உத்தியோகஸ்தர்கள் ஒன்றும் செய்ய முடியாது, உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்ற கோரிக்கைக்கு அனுசரணையாக ஸமஸ்தானத்தில் இவ்வருஷத்தில் **26,000** ஏக்கர்கள் அதிகமாகச் சாகுபடி செய்யப்பட்டிருக்கின்றன. யுத்தக் கடன்களிலும், ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகளிலும் பணத்தைப் போட்டுவைப்பது, சொந்தச் செலவுகளில் சிக்கனம் செய்வது, உபயோகமற்ற காகிதங்களைச் சேமித்துவைப்பது. கஷ்டம்வந்த காலத்திலும் சந்தோஷத்தைக் கைவிடாமல் இருப்பது ஆகிய வழிகளில் நாமெல்லோரும் ஏதாவது உதவிபுரியமுடியும். இந்த வகைகளிலெல்லாம் நம்மில் ஒவ்வொருவரும் எவ்வளவு அற்பமாயினும் ஒத்தாசை செய்யமுடியும். செய்தால் நம்முடைய பிரார்த்தனையின்படியும், ஆசையின்படியும், நமக்கு சீக்கிரத்தில் வெற்றியும், அமைதியும் கைகூடும்.

---

## ஐக்கிய நாடுகள்.

| ந. | பெயர். | சதுர மைல் விஸ்தீர்ணம். | ஜனத் தொகை. |
|---|---|---|---|
| 1 | அபிஸீனியா ... | 350,000 | 20 |
| 2 | ஆஸ்திரேலியா ... | 3,000,000 | 70 |
| 3 | பெல்ஜியம் ... | 11,775 | 84 |
| 4 | பொலிவியா ... | 506,000 | 32 |
| 5 | பிரேஸில் ... | 3,285,000 | 450 |
| 6 | கனடா ... | 3,695,000 | 104 |
| 7 | சிலி ... | 297,000 | 47 |
| 8 | சைனா ... | 4,481,000 | 4,580 |
| 9 | கோஸ்டாரிகா ... | 23,000 | 6 |
| 10 | குபா ... | 44,000 | 420 |
| 11 | செக்கோஸ்லோவாகியா. | 52,000 | 150 |
| 12 | டாமினிசான் ஜனநாயகங்கள். | 19,000 | 16 |
| 13 | ஸ்வதந்திர பிரான்ஸ் ... | ... | ... |
| 14 | கிரேட் பிரிடனும், நியூ அயர்லாந்தும். | 94,000 | 475 |
| | பிரிடிஷ காலனிகள். | 2,075,000 | 468 |
| 15 | கிரீஸ் ... | 50,000 | 63 |
| 16 | காட்டிமாலா ... | 45,000 | 33 |
| 17 | ஹெய்தி ... | 10,000 | 30 |
| 18 | ஹொண்டுரோஸ் ... | 44,000 | 11 |
| 19 | இந்தியா ... | 1,800,000 | 3,900 |
| 20 | இராக் ... | 117,000 | 36 |
| 21 | லக்ஸம்பர்க் ... | 990 | 3 |
| 22 | மெக்ஸிகோ ... | 780,000 | 165 |
| 23 | நெதர்லாந்து (ஹாலந்து). | 12,000 | 87 |
| | (நெதர்லாந்து ராஜ்யம்). | 789,000 | 602 |
| 24 | நியூஸீலாந்து ... | 100,000 | 15 |
| 25 | நிகாராகுவா ... | 60,000 | 12 |
| 26 | நார்வே ... | 125,000 | 30 |
| 27 | பனாமா ... | 32,000 | 4 |
| 28 | போலந்து ... | 150,000 | 350 |
| 29 | ஸால்வடார் ... | 13,000 | 18 |
| 30 | தெற்கு ஆபிரிக்கா ... | 473,000 | 96 |
| 31 | அமெரிக்க ஐக்கிய நாடுகள். | 3,700,000 | 1,510 |
| 32 | ஸோவியத் ருஷ்யா ... | 8,144,000 | 1,800 |
| 33 | யூகோஸ்லாவியா ... | 95,000 | 140 |
| | மொத்தம் ... | 34,442,765 | 15,830 |

# நேசதேசத்தார்களின் கொண்டாட்டதினம்.

## நற்செய்திகள்.

### ஜெனரல் சியாங்கை ஷேக்.

இன்று நாம் பிரிடிஷ் கொடியையும், மற்ற நேசதேசத்தாரின் கொடிகளையும் கௌரவிக்கும்பொழுது சீன சேனைக்கும், ஜனங்களுக்கும் தலைவரான நான் பிரிடிஷ் மக்களுக்கும், துருப்புகளுக்கும் நல்வரவு கூறுகிறேன். நாம் எல்லோரும் இறுதியில் வெற்றிபெறுவதற்காக நம்முடைய உயிரை அர்ப்பணம் செய்திருக்கும் யுத்த முயற்சியில் நமக்கு வெற்றி நிச்சயமாய்க் கிடைத்துவிடுமென்று ஒவ்வொரு நாளும் காண்பித்துவரும் நேசதேசப் படைகளின் வலிமையைக்கண்டு நாம் சந்தோஷப்படுகிறோம். எல்லா யுத்த அரங்கங்களிலும் யுத்த நடவடிக்கைகளை நடத்துவதில் நீங்கள் காண்பித்துவரும் மனோதிடத்தையும், ஆர்வத்தையும் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பிரிடிஷ் படைகளுக்குக் கிடைத்திருக்கும் வெற்றிகளும், இதர நேசநாடுகளுக்குக் கிடைத்திருக்கும் வெற்றிகளும் சேர்ந்து, நாம் ஈடுபட்டிருக்கும் இந்த மகத்தான யுத்தமானது நமது சத்துருக்கள் நிபந்தனையற்ற சரணாகதி செய்வதுடன் இறுதியில் முடிவடையுமென்பதைக் குறிப்பிடுகின்றன.

### ஜெனரல் ஈஸன்ஹவர்.

ஸ்வதந்திர நாடுகள் ஒன்றுபட்டபொழுது கொடுங்கோல் வல்லரசுகள் நடுநடுங்கவேண்டியதுதான். நேசநாடுகள் மனோநிலையிலும், ஐச்வர்யத்திலும், முஸ்தீப்புகளிலும், நோக்கங்களிலும் ஒன்றுபட்டுவிட்டார்கள். சேர்ந்து வாழ்வது சிறந்த வலிமையென்ற அபிப்பிராயத்தை வட ஆபிரிக்காவில் நாம் ருஜுப்பித்துவிட்டோம். தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் நேசதேசத்தார்கள் தங்கள் படைகளை ஒன்றுபடுத்தி, அக்கிரமக்காரர்களை வட ஆபிரிக்காவைவிட்டுத் துரத்தியடிப்பதற்குத் திட்டம்போட்டு, நடவடிக்கை நடத்தி யுத்தம் செய்து வெற்றிபெற்றார்கள். இந்த ஒத்துழைப்பினால் டுனிஸியாவிலுள்ள அச்சுப்படைகள் பலமான தோல்வி பெற்றன. யதேச்சாதிகாரிகளுக்கு இதிலிருந்து விசேஷக்கெடுதல் ஏற்படும். உலகத்தில் சுயேச்சை, மனித உரிமைகள் எல்லாவற்றையும் மதிக்கக்கூடாது என்று அவர்கள் எண்ணங்கொண்டிருந்தார்கள். இவைகளை ஸ்தாபிக்கத்தான் நேசநாடுகள் மகத்தான முயற்சிகள் செய்திருக்கிறார்கள். எதிரியின் முதல் யுத்த தந்திரம் நம்மைச் சின்னா பின்னம் செய்துவிடுவதுதான். ஆகையால் டுனிஸியா வெற்றியானது நேசநாடுகளின் ஒற்றுமைக்கு சிலாசாசனம்போல் விளங்குவதுடன் ஹிட்லரின் கொள்கைகளுக்கு அழிவையும் அளித்துவிட்டது. வருங்காலப்போக்கைப்பற்றி நமக்கு நம்பிக்கையுண்டாகியிருக்கிறது. நம்முடைய நோக்கங்களிலும், நடவடிக்கைகளிலும் நாம் ஒன்றுபட்டுவிட்டோம். இந்த ஒற்றுமையின் மூலமாகவே யுத்தத்துக்குப் பின் சாச்வதமான சமாதானமும் உலகில் உண்டாகப்போகிறது.

### ஜெனரல் டிகால்

ஆபிரிக்க யுத்தம் முடிந்துவிட்டது. ஐரோப்பாவுக்காக யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. மறுபடியும் பிரான்ஸ் யுத்தத்தில் ஈடுபட்டுவிட்டது.

பிரான்ஸிலுள்ள பலிஷ்டர்களை எதிரி ஜெர்மனிக்குக் கொண்டுபோகிறான். பிரான்ஸில் கொடுமையும், அடக்குமுறையும் அதிகரித்திருக்கிறது. உத்தரவு கிடைத்த உடன்காலத்தில் பிரெஞ்சு மக்கள் கலகம் செய்ய ஆரம்பித்துவிடுவார்களென்ற பீதிதான் இவைகளுக்குக் காரணம். பிரெஞ்சு மக்கள் தன்னைச்சுற்றி வளைக்க கபடமான நடவடிக்கைகள் செய்துவருகிறார்களென்றும் ஹிட்லருக்குத் தெரியும். எதிர்க்கும் பிரெஞ்சு மக்கள் எதிரியுடன் பகிரங்கமாகப் போரிடும் நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இன்று திடமுள்ள ஒன்றுபட்ட பிரெஞ்சு தேசமானது பிரிடிஷ் சாம்ராஜ்யம் அமெரிக்கா, ருஷ்யா, மற்ற நேசநாடுகளுடன் ஒன்றுபட்டு நிற்கிறது. பிரெஞ்சு மக்கள் ஸ்வதந்திரம் பெறுவதற்கும், பிரான்ஸின் உத்தாரணத்திற்கும் எவ்வித தியாகமும் செய்யத் தயாராகயிருக்கிறார்கள்.

### ஜெனரல் கிராட்.

பிரெஞ்சு தேசிய ஸ்வதந்திர கமிட்டியானது, நேசநாடுகளுடன் ஒத்துழைத்து பிரான்ஸின் பூர்ண ஸ்வதந்திரத்தையும், நேசதேசங்களின் ராஜ்யங்களின் விடுதலையையும் நிலைநாட்டி, பூர்ணமான வெற்றி கிடைக்கும் வரையில் யுத்தம் செய்வதென்று வாக்குறுதி செய்துவிட்டது. யுத்த அரங்கத்தில் பிரெஞ்சுக் கொடிகளும் பறந்துகொண்டிருக்கின்றன. அவைகள் நேசதேசக் கொடிகளுடன் சேர்ந்து பறந்துகொண்டிருக்கின்றன. பிரெஞ்சு மக்கள் இதாலியிலும், ஜெர்மனியிலும், ஜப்பானிலும் யுத்தம் செய்யச் செல்லுவார்கள்.

## கிழக்குத் திசையிலுள்ள சேனையின் தலைமை உத்தியோகஸ்தர்.

சரித்திரத்தில் நடைபெறாதபடி நேசதேசத்தார்கள் ஸ்வயநலம் பாராட்டாமல் பொதுவான லக்ஷியத்துக்காக ஒன்றுபட்டிருக்கிறார்கள். நம்முடைய பொதுவான தியாகங்களின் அடிப்படையான எண்ணங்கள் சிறந்தவை. நமக்கு வெற்றி கிடைப்பது நிச்சயம்.

ஜூன் மீ 14-ம் தேதி நேசதேசதினக் கொண்டாட்டம் நடைபெறவேண்டுமென்று குறிப்பிட்டதன்மூலம் நேசதேசத்தார்கள் எதிரிகளை ஐரோப்பாவிலும், தூரக்கிழக்கிலும் முறியடிக்கத் தீர்மானம் செய்திருக்கிறார்கள் என்பதை நமக்கு ஞாபகப்படுத்துகிறார்கள்.

கொடுங்கோலையும், அபநியாயத்தையும், கொடுமையையும் தொன்றுதொட்டு மனித வர்க்கம் வெறுத்துவந்ததுபோல் அதே காரணத்தினால் தேசங்கள் ஒன்றுபட்டு ஐரோப்பாவையும், ஆசியாவையும் தங்களுடைய ஸ்வயநலத்துக்காக வசப்படுத்தவேண்டுமென்று கெட்ட எண்ணம்கொண்டவர்களை எதிர்த்து முறியடிப்பதற்கும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

## பத்தாவது அமெரிக்க விமானப்படையின் தளகர்த்தர்.

இந்தியாவில் வேலை செய்துவரும் அமெரிக்க விமானப்படையின் சார்பாக நேசதேசக் கக்ஷியில் ஒரு அங்கத்தினராகயிருப்பதில் நாங்கள் பெருமை பாராட்டுகிறோம். இந்த ஒற்றுமைக்குக் காரணம் தன்னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளுவதும், சமாதான முறையை ஆதரிக்கும் ஜனநாயகங்கள் அவலம்பித்துவரும் உயர்ந்த நோக்கங்களை ரக்ஷிப்பதும்தான்.

பெர்ல் துறைமுக யுத்தத்துக்குப் பின்னும் நேசதேசங்களின் ஒன்றுபட்ட சமாஜம் ஏற்படும் வரையிலும் வருங்கால நிலைமை பயங்கரமாகயிருந்தது. சென்ற உலக யுத்தம் முடிந்தது முதல் மறு யுத்தத்துக்காக முஸ்தீப்புகள் தயார் செய்துவந்திருக்கும் அச்சு வல்லரசுகளுடன் பலமான யுத்தம் நடத்த நாம் தயாராகயில்லை.

பெர்ல் துறைமுகத்தில் ஏற்பட்ட சம்பவங்கள்தான் நமது கண்மூடித்தனத்தை அகற்றியது. நவீன யுத்தமுறைகளின் உண்மைகளையும் வெளிப்படுத்தியது. நமக்கு அதிக நஷ்டமேற்பட்டபோதிலும், அதிலிருந்து நமது நாட்டிலுள்ள அலக்ஷிய புத்தி அகன்றுவிட்டது. தேச விசுவாஸம் தூண்டப்பட்டு, பூர்ணமான யுத்த முயற்சியில் நாம் ஈடுபடும்படியாகவும் ஏற்பட்டுவிட்டது.

பொருள்களும், ஆள்களும் அதிகமாகக் கிடைத்துவருவதிலிருந்து நேசதேசத்தாரின் யுத்த முயற்சிகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. எதிரிகளுக்கு வருங்காலத்தில் ஏற்படப்போகும் இகழ்ச்சிகளுக்கு வட ஆபிரிக்காவில் அச்சு வல்லரசுகள் தோல்வியுற்றது முற்போக்காகும். வருங்காலத்தில் நமக்குக் கஷ்டப்படவேண்டிய சமயங்கள் அநேகமிருக்கின்றன. ஆகிலும் நேசதேசத்தார்கள் இடைவிடாது ஒத்துழைத்து முயற்சிசெய்துவருமாகையால் நமக்கு இறுதியில் வெற்றிகிடைப்பது நிச்சயம்.

## மேன்மை தங்கிய மதராஸ் கவர்னர்.

மூன்றரை வருடங்களுக்குப் பின் வெற்றிச் சின்னங்கள் நமக்குத் தோன்றியதற்கு ஒற்றுமைதான் காரணம். இதே ஒற்றுமைதான் நமக்குக் கூடிய சீக்கிரத்தில் இறுதி வெற்றியையும் அளிக்கப்போகிறது. ஒற்றுமைதான் உலகத்திலிருந்து நாஸி தத்துவம், பாஸித்துவம், ஜப்பானின் அக்கிரம யுத்தம் இவைகளை அழித்துவிடப்போகிறது. ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் அநேகர் இங்கு குழுமியிருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். முக்கியமாக ஐரோப்பாவில் ஜெர்மன் ஆதிக்கத்தை முறியடிப்பதில் பேருதவி செய்திருக்கும் நமது நண்பரான ருஷ்யாவின் பிரதிநிதியும் இங்குவரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

அடுத்த வருஷம் இந்நாளில் யுத்த முடிவையோ அல்லது யுத்தத்தின் பெரும்பாகத்தின் முடிவையோ நாம் இங்கு கொண்டாடவேண்டுமென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். ஜப்பானிடமிருந்து சீனாவும், ஜெர்மனியிடமிருந்து கிரீஸும் விடுதலைபெறுமென்றும், பிரான்ஸில் பூர்ண ஒற்றுமை ஜனங்களிடம் ஏற்பட்டுவிடுமென்றும், சரித்திரத்திலேயே மகத்தான இத்தகைய அபாயத்தினின்றும் உலகம் பூராவும் நிவர்த்தியடையுமென்றும் நான் நம்புகிறேன்.

இந்தியாவிலுள்ளவர்களும் யுத்த முயற்சிகளைச் செய்யவேண்டும். அச்சு வல்லரசுகளை முறியடிக்கவேண்டுமென்று நீங்களும் ஆசைப்படுகிறீர்கள். இந்தியாவிலுள்ள நாங்களும், பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலுள்ளவர்களும், நேசதேசங்களிலுள்ளவர்களும் எல்லா நாடுகளும் இறுதிவெற்றி பெறும்வரையிலும் உலகத்தில் மக்கள் சிறந்த முறையிலும் சந்தோஷமாகவும், ஜீவிக்கவும் திட்டங்கள் அமைக்கும் வரையிலும் நாங்கள் தளர்ச்சியடையாமல் இடைவிடாது சண்டையை நடத்துவோமென்றும் நான உங்கள் முன்னிலையில் உறுதி கூறுகிறேன்.

# வார யுத்தச் செய்திகள்.

## 12—6—43-லிருந்து 18—6—43-வரை.

**மன்னர்பிரானின் விஜயம்.**—பிரிடிஷ் 1-ம் படையையும், எட்டாம் படையையும் பார்வையிட மாகூமிமை தங்கிய மன்னர்பிரான் வட ஆபிரிக்காவுக்கு விமான மூலம் விஜயம் செய்திருக்கிறார். ஆபிரிக்கா யுத்தத்தில் கியாதிபெற்ற அமெரிக்கப் படைகளையும், விமானப் படையையும், சண்டைபோடும் பிரெஞ்சுப் படைகளையும் அவர் பார்வையிடுவார். இந்த சமயத்தில் ஜெனரல் ஈசன்ஹவருக்கு ஜி. ஸி. ஓ. பி. பதக்கத்தையும் அவர் அளிப்பார். ஐரோப்பாவைப் படையெடுக்கத் தயாராயிருக்கும் படைகளுக்கு மன்னர்பிரானின் விஜயமும், பாராட்டும், அதிக உத்சாகத்தை மூட்டும். இந்த நடவடிக்கை பிரிடிஷ் சாம் ராஜ்யத்துக்கும் நேசதேசங்களுக்கும் திருப்தியளிக்கிறது.

துருக்கி பக்கமாக உள்ள ஸிரியாவின் எல்லைப்புறத்தை பிரிடிஷ் அதிகாரிகள் மூடிவிட்டார்கள்.

இன்று ரேடியோவில் லின்லித்கோ பிரபுவின் உத்தியோக காலம் முடியும்பொழுது அக்டோபர் மாதத்திலிருந்து பீல் மார்ஷல் வேவல் இந்திய வைஸ்ராயாகவும் ஜெனரல் ஆசின்லக் இந்தியாவின் சேனாதிபதியாகவும் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் வெளியிடப்பட்டது. ஆசின்லக் உடன் காலத்திலேயே அதிகாரம் ஏற்றுக்கொள்ளுவார். கிழக்கு ஆசியாவில் துருப்புகளுக்குத் தனிப்பட்ட ஒரு தலைவர் நியமிக்கப்படுவார். இந்தியா இந்த புதிய ஏற்பாட்டிலிருந்து விலக்கப்படும்.

இந்த வாரத்தில் முக்கியமாக மத்தியதரைக்கடலிலுள்ள இதாலியத் தீவுகளுக்காக யுத்தம் நடைபெறுகிறது. ஸிஸிலியின் குறுகிய சமுத்திரத்திலுள்ள நான்கு தீவுகள்—பான்டெலேரியா, லாம்பெடூஸா, லினோஸா, லாம்பியோன்-நிபந்தனையற்ற சரணாகதி செய்துவிட்டன. இவையெல்லாம் இதாலியைச் சேர்ந்தவை. நேசதேசத்தார்கள் இப்பொழுதுதான் எதிரியின் ராஜ்யத்தின் சில பாகங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

நமக்கு மால்டாபோல் இதாலிக்கு பான்டலேரியா இருந்தது. ஜூன் மாதம் 11-ம் தேதியன்று சனிக்கிழமை அதிலிருந்த 20,000 பேர்கள் சரணடைந்து கைதிசெய்யப்பட்டார்கள். மூன்று வாரங்களாக இடைவிடாது கப்பல்களிலிருந்தும் வெடி விமானங்களிலிருந்தும் வெடி குண்டுகளைவர்ஷித்தபின் இந்த வீழ்ச்சி ஏற்பட்டது. இதற்குபின் 36 மணிகள் கழித்து லாம்பெடூஸா விழுந்தது. இங்கு 24 மணிநேரம் குண்டுவீச்சு நடந்தது. பெட்ரோல் குறைவினால் இந்தத் தீவுலிறங்கிய விமானப்படை ஸார்ஜண்ட் ஒருவரிடம் இந்தத் தீவிலுள்ளவர்கள் சரணம் புகுந்தனர். லினோஸவை 13-ம் தேதியன்று பிரிடிஷ் நாசகாரியான நூபீயன் கைப்பற்றியது. கழுதையின்பேரில் ஏறிச்சென்று ஒரு பிரிடிஷ் கடற்படை அதிகாரி நிபந்தனையற்ற சரணாகதி செய்யவேண்டுமென்று உத்தரவிட்டார். பிரிடிஷ் தலைமை அதிகாரியின் கப்பல் 14-ம் தேதியன்று லாம்பியோனைப்பிடித்தது.

ஜூன் மாதம் 6-ம் தேதியன்று ஸ்பிஸியாத்துறைமுகத்தை நமது வெடி விமானங்கள் தாக்கின. மூன்று இதாலியச் சண்டைக் கப்பல்களும், கனமான ஒரு சஞ்சாரியும், ஒரு சாமான் கப்பலும் நாசமாக்கப்பட்டன.

**ஜெர்மனி.**—இந்த வாரத்தில் பிரிடிஷ் விமானப்படை பின்கண்ட இடங்களைத் தாக்கிலது. டஸ்ஸல்டார்ப், மன்ஸ்டர், போகம், பிரமென், கீல், ஓபெர் ஹாஸன். டஸ்ஸல்டார்ப்பை வெடி விமானங்கள் ஒரு மணி நேரம் தாக்கின. மத்திய ரூர் பிரதேசத்திலுள்ள போகம் என்னுமிடத்தின் பேரில் 4,000 பவுண்டு எடைமானமுள்ள வெடி குண்டுகளும் ஆயிரக்கணக்கான எறி வெடிகளும், வெடி குண்டுகளும் வீசப்பட்டன. போகம் என்பது நிலக்கரி, இரும்பு உற்பத்தியாகும் முக்கியமான பிரதேசம். 13-ம் தேதியன்று பிரமெனிலுள்ள கடற்படை வைப்பு ஸ்தலங்கள் தகர்க்கப்பட்டன. ரூர் பிரதேசத்தின் ஐந்தாவது முக்கியமான தொழிற்சாலைகளுள்ள நகரமான செர்ஹாஸனை 14-ம் தேதியன்று நமது வெடி விமானங்கள் தாக்கின.

**ருஷ்யா.**—ருஷ்யாவில் சஞ்சலப்பட்ட அமைதி நிலவுகிறது. கிழக்குப் போர்முனையைப் பற்றி ராணுவ நிபுணர்களும் வியாக்கியானிகளும் அபிப்பிராயம் கூற ஆரம்பித்துவிட்டார்கள். மாஸ்கோவைப் பிடிக்க ஹிட்லர் பிரயத்தனம் செய்யப்போகிறானென்று அங்காரா வெளியிட்டது. இதற்குபின் ஜெர்மனி தற்காப்பு யுத்த முறையைக் கையாளுமென்று டிட்மார் அபிப்பிராயம் கூறினர். நிச்சயமாக ருஷ்யக் குளிர்காலம் இப்பொழுது போய்விட்டது.

ஜெர்மன் முன்னேற்ற யுத்தத்துக்கு யாதொரு தடங்கலுமில்லை. 1941-ம் வருஷத்திலும் 1942-ம் வருஷத்திலும் ஜெர்மனியின் முன்னேற்ற யுத்தம் ஜூன் மாதம் 21-ம் தேதியிலும் ஜூன் மாதம் 19-ம் தேதியிலும் ஆரம்பமாயிற்றென்றாலும் ருஷ்யாவில் தரையில் சௌகரியமான நிலைமை ஏற்பட்டு ஒரு மாதத்துக்கு மேலாகுகிறது. இப்பொழுது ஒரல், ஸாரடாவ், விசிஸான்ஸ், ராஸ்டாவ், போன்ற முக்கியமான ஸ்தானங்களில் சிறிய போர்கள் நடைபெருகின்றன.

**சைனு.**—இடுவிலிருந்து ஜப்பானியர்களைத் துரத்தியடித்தபின், சீனர்கள் யாங்ட்ஸே கரையிலுள்ள டாஷி, யுன்மாங்க், ஸுஷின், யிங்ச்சாங்க், இச்வாடங்க் முதலிய இடங்களைத் தாக்கியிருக்கிறார்கள். கஸ்காப், ஸாங்க்ட்ஸீ, மிச்சிடே, பிலிசௌ முதலிய இடங்களையும் பிடித்துவிட்டார்கள், பீலிசௌ என்பது யாங்ட்ஸே நதி மத்தியிலுள்ள ஒரு தீவு.

**சின் மலைக்குன்றுகள்.**—மே மாதம் கடைசியில் 6 நாட்கள் யுத்தம் நடைபெற்றதென்றும் ஜப்பானியர்களில் 500 பேர் நாசமாயினரென்றும் தகவல் கிடைத்திருக்கிறது, யுத்தமானது அரக்கானுக்கு வடக்கே 200 மைல்களுக்கப்பாலுள்ள காலிமேயோ என்னுமிடத்திற்குச் சமீபத்திலுள்ள மலைப்பிராந்தியங்களில் நடைபெற்றது. ஜப்பானியர்கள் சின்மலைகளிலுள்ள டிட்டான் என்னும் முக்கிய நகரத்தைப் பிடிக்க எண்ணம்கொண்டார்கள் குர்க்காப்படைகளும் சின் படைகளும் தற்காப்பு செய்துவந்த ஸிக்னல் குன்று என்னும் எல்லைப்புற ஸ்தானத்தை முதலில் ஜப்பானியர்கள் தாக்கினார்கள். ஒருநாள் சென்றபின் நமது துருப்புகள் காடடர்ந்த செங்குத்தான மலைச் சரிவுள்ள பாஷா என்னும் ஜப்பானிய முன்னணி ஸ்தானத்தை முன்னேறித் தாக்கினார்கள். இரண்டு தடவை தாக்கினார்கள். 6 மணி நேரம் அதைச் சமாளித்து வந்தார்கள். கடைசியாக ஜப்பானியரின் குண்டுவீச்சு அதிகரித்தபொழுது நமது படைகள் பின்வாங்கின. இதுதான் 6 நாட்கள் நடைபெற்ற யுத்தத்தின் முடிவு. ஜப்பானியர்களுக்கு அதிக ஆள் சேதம் ஏற்பட்டதால் அவர்கள் முன்னேற முடியவில்லை. அவர்கள் மலைப் பிரதேசத்தில் ஒரு ஸ்தானத்தை மட்டும்தான் வசப்படுத்தியிருக்கிறார்கள்.

**தென்மேற்கு பஸிபிக்.**—ஆஸ்திரேலியாவுக்கு வடக்கே அர்த்த கோணவடிவமாகயிருக்கும் ஜப்பானியப்படை யமைப்புகளை நாம் ஊடுருவிக்கொண்டிருக்கிறோம். சாயிஸல், முண்டா, கிஸ்கா, ரஸ்ஸல் தீவுகள் வெடி விமானங்களால் தாக்கப்பட்டன.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**7—6—43.** (திங்கட்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—எதிரிக் கப்பல்கள்—டச்சு கடற்கரை. படகுகள் ஹாலந்து (Holland), நீராவி வண்டிகள்—(Brittany) (5 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இதாலி (Italy),

**மத்தியதரைக்கடல்** (Mediterranean).

அச்சுநாட்டு லக்ஷியங்கள்—பாண்டல்லேரியா (Pantellaria) ஸிஸிலி (Sicily).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ஜெர்மன் விமான நிலயங்கள்—பிரையான்ஸ்க் (Bryansk) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—ரஸ்ஸல் (Russell) தீவு (19 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன. இதர 6 விமானங்களும் நாசமாக்கப்பட்டன). அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

**ஜப்பானியச் சைனியங்கள்.**—பர்மாவிலுள்ள வாசி (Wahsi).

**8—6—43.** (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

இதாலி (Italy),

**மத்தியதரைக்கடல்** (Mediterranean).

அச்சுநாட்டு லக்ஷியங்கள்—பாண்டல்லேரியா (Pantellaria).

எதிரி தளங்கள்—தெற்கு ஸார்டீனியா (South Sardinia).

ருஷ்யா (Russia).

**விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.**—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

அச்சுநாட்டு **விமான நிலயங்கள்**—ஆக்கிரமித்த ருஷ்யா.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய **துணைக்காவலோடு கூடிய கப்பற் கூட்டம்.**—பிஸ்மார்க் கடலிலுள்ள கேவியங் (Kavieng).

**ஜப்பானிய விமான நிலயங்கள்.**—டச்சு நியூ கினி (Dutch New Guinea), போர்ச்சுகீஸ் டிமோரிலுள்ள டில்லி (Dili).

**ஜப்பானிய சைனியங்கள்.**—நியூ ஜார்ஜியா தீவிலுள்ள முண்டா (Munda).

**9—6—43.** (புதன்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி கப்பல்கள்.—ஏஜியான்கடல் (Aegean Sea), பான்டேல்லேரியா (Pantellaria).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ஜெர்மன் விமான நிலயம்—ருஷ்யாவின் மத்திய அரங்கம்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—டச்சு நியூகினியிலுள்ள நெபயர் (Nabire).

இதர லக்ஷியங்கள்.–பர்மாவிலுள்ள கேலிவா (Kalewa).

**10—6—43.** (வியாழக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமானத் தாக்குதல்கள் வடக்கு பிரான்ஸ (Northern France) பெல்ஜியம் (Belgium).

பீரங்கி தாங்கிய படகுகள்.–டச்சுக் கடற்கரை.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயங்கள்.—ஸிஸிலியிலுள்ள ஜெர்பினி (Gerbini), கடானியா (Catania), பான்டல்லேரியா (Pantellaria).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

விமான நிலயங்கள்.—ஜெர்மனி ஆக்கிரமித்த ருஷ்யா.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

சாமானிறங்குமிடங்கள்.—பர்மாவிலுள்ள ராதிடாங் (Rathedaung).

கட்டடங்கள்.—பூதிடாங் (Buthidaung).

மோட்டார் போக்குவரத்துகள், படகுகள்.—பர்மாவிலுள்ள பூதிடாங் (Buthidaung).

ஜப்பானிய தளம்.—பர்மாவிலுள்ள கேலிவா (Kalewa).

ஆற்றுப்படகுகள்.—பர்மாவிலுள்ள கேலிவா (Kalewa)விலிருந்து மிங்யான் (Myingyan) வரையிலும்.

படகுகள்.—பர்மாவிலுள்ள ராம்ரீ (Ramree) தீவு.

**11—6—43.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—யு-படகுகள்—ஜெர்மனியிலுள்ள வில்ஹெல்ம் ஷாவன் (Wilhelmshaven).

துறைமுக ஸ்தாபனங்கள் ஸப்மரீன் தளங்கள்.—ஜெர்மனியிலுள்ள கக்ஸ்ஹேவன் (Cuxhaven), பெல்ஜியத்திலுள்ள ஸீப்ரக்கி (Zeebrugge).

விமானத் தாக்குதல்கள்.—வடக்குபிரான்ஸ், டச்சுக் கடற்கரை (5 அச்சுநாட்டு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. ஒரு நேசதேச விமானம் காணப்படவில்லை).

இரவு.—தொழிற்சாலை ஸ்தலம்—ஜெர்மனியிலுள்ள டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).

போக்குவரத்து ஸ்தலம்.—ஜெர்மனியிலுள்ள மன்ஸ்டர் (Munster).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

இதாலிக்கு அருகாமையிலுள்ள தீவு.—லேம்படூஸா (Lampedusa).

ஒரு தொழிற்சாலை.—ஸிஸிலியிலுள்ள பொஸல்லோ (Pozzallo).

ரயில்வே ஸ்தலங்கள்.—ஸிஸிலியிலுள்ள மிலாஸ்ஸோ (Milazzo).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ஜெர்மன் விமான நிலயம், விரது, யுத்த தளவாடங்கள்.—ஆக்கிரமித்த ருஷ்யா.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம், மின்சார நிலயம்.—போர்ச்சுகீஸ் டிமோரிலுள்ள கோபேங் (Koepang).

வேனகானன் (Venakanau) ரபால்.

விமான நிலயம்.–நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul), டச்சு நியூ கினியிலுள்ள பேபோ (Babo), டில்லி (Dilli).

ஜப்பானிய இலக்குகள்.—நியூ கினியிலுள்ள மடாங் (Madang), ஸாலமூவா (Salamaua). நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

இலக்குகள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab) தீவு.

எதிரிச் சைனியங்கள் -பெய்ஸாங் (Pheizang)

டாங்கி குவியல்கள், ஆற்றுப்படகுகள்' ரஸ்தாப் போக்குவரத்துகள்.–சிண்ட்வின் (Chindwin).

**12—6—43.** (சனிக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—அச்சுநாட்டு லக்ஷியங்கள்—பிரான்ஸிலுள்ள (Rouen), கேயன் (Caen).

இரவு.—பெரிய தொழிற்சாலை நகரம்.—ரூரிலுள்ள போக்கம் (Bochum).

போக்குவரத்துகள்.—ஹாலந்து, வடக்கு பிரானஸ்.

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy),

மத்தியதரைச்கடல் (Mediterranean).

அச்சுநாட்டு தளம்.—லேம்பெடூஸா (Lampedusa).

விமான நிலயங்கள்.—ஸிஸிலியிலுள்ள கேஸ்ட்ரல் வெட்ரனோ (Castrel-vetrano), மிலோ (Milo), பொக்கட்டிபால்கோ (Boccadifalco).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ஜெர்மன் விமான நிலயம் போக்குவரத்து ஸ்தலங்கள்.—ஆக்கிரமித்த ருஷ்யா.

தூரக்கிழக்கு (Far East).

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

ஜப்பானிய தளம்.—நியூ கினி (New Guinea).

ஆற்றுச் சாமான் இறக்குமிடங்கள்.—பர்மாவிலுள்ள பூதிடாங்கிற்கு (Buthidaung) அருகில்.

பாலம்.—பர்மாவிலுள்ள கேலிவா (Kalewa).

சைனியங்கள் தயார் செய்யும் இடங்கள்.—பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay).

ரயில்ரோட் பாலம்.—மிடிங்கி (Mytinge), படகுகள்.—ஐராவதி (Irrawady).

சேகரங்கள்.—ஸகயங் (Sagaing).

13—6—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—அச்சுநாட்டு லக்ஷியங்கள்—பெல்ஜியத்திலுள்ள பிளஷ்ஸிங் (Flushing).

இரவு.—ராணுவ லக்ஷியங்கள்.—ஜெர்மனியிலுள்ள ரைன்லாந்து (Rhineland).

சுரங்கவேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy).

மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயங்கள்.—ஸிஸிலியிலுள்ள ஜெர்பினி (Gerbini), கட்டானியா (Catania).

எதிரிக் கப்பல்கள்.—எஜியான் கடல் (Aegean Sea), கிரீஸின் (Greece) மேற்குக்கரை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே ஜங்ஷன்கள்.—ஓரல் (Orel).

தூரக்கிழக்கு (Far East).

வேனகானன் (Vunakanau).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள ரபால் (Rabaul).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

டிமோரிலுள்ள டில்லி (Dilli).

பட்டணம்—டிமோரிலுள்ள கொபேங் (Koepang).

ஜப்பானியச் சைனியங்கள்.—காஹிலி (Kahili), பூயின் (Buin) பிரதேசங்கள்.

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

ரயில்ரோட் பாலங்கள்.—பர்மாவிலுள்ள மெஸா (Meza), கங்கான் (Kyungon).

எதிரி ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள நியாங்பின்பின்வின் (Nyaungbinwun), அள்ளகப்பா (Allagappa).

விமான நிலயம்.—சைனாவிலுள்ள நான்சாங் (Nanchang).

கிட்டங்கிகள்.—சைனாவிலுள்ள பூச்சி (Puchi).

விமானச் சண்டைகள்.—சைனாவிலுள்ள காண்டன் (Canton).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

8—6—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

ருஷ்யா (Russia).

விமான நிலயம்.—கொர்க்கி (Gorki).

9—6—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் விமானப்படையெடுப்பு ஒரு இடத்திலும் இல்லை.

ருஷ்யா (Russia).

ஸப்ளை தளங்கள்.—ருஷ்ய அரணுக்குப்பின்.

10—6—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமான நிலயங்கள்.—யாரோஸ்லாப் (Yaroslavl).

11—6—43 (வெள்ளிக்கிழமை).

எதிரிவிமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமான நிலயங்கள்.—கொர்க்கி (Gorki) இதர இடங்கள்.

12—6—43 (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் பிரதேசம். (சொற்பமான குண்டுகள் போடப்பட்டன).

ருஷ்யா (Russia).

ருஷ்ய விமான நிலயங்கள்.—மத்திய அரங்கம்.

தூரக்கிழக்கு (Far East).

சைனாவிலுள்ள ஹேங்யாங் (Hengyang).

13—6—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

முக்கியமான துறைமுகம்.—இங்கிலாந்தின் வடகிழக்குக் கடற்கரை பட்டணம்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—குபான் (Kuban), இதர அரங்கங்கள்.

**தூரக்கிழக்கு (Far East).**

கூடனே (Goodenough) தீவு.

**14—6—43.** (திங்கட்கிழமை).

**பிரிடன் (Britain).**

**இரண்டு பட்டணங்கள்.**—இங்கிலாந்தின் கிழக்குக்கரையில்.

**லண்டன் பிரதேசம்.**—(விமான எச்சரிக்கை மட்டும்), (5 அச்சுநாட்டு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன)

**ருஷ்யா (Russia)**

**ருஷ்ய ரயில்வே போக்குவரத்துகள்.**—ருஷ்ய அரண்களுக்குப்பின்.

**தூரக்கிழக்கு (Far East).**

நியூ கினியாவிலுள்ள போர்ட் மோர்ஸ்பி (Port Moresby).

# யுத்தக் குறிப்புகள்.

**நேசதேசங்களின் கொண்டாட்ட தினம்.** உலகம் பூராவும் நேசதேச தினம் கொண்டாடப்பட்ட தென்று பிஜித்தீவுகள், ஸிட்னி, சுங்கிங், கெய்ரோ, அபிஸீனியா, பெரூட், லண்டன், மாஸ்கோ, நியூயார்க் போன்ற பல்வேறு பாகங்களிலிருந்தும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. லண்டனில் ஒரு பெரிய கூட்டம் குழுமியிருந்தது. சாம்ராஜ்ய பவனி வருவதை ஜனங்கள் கண்ணுற்றார்கள். ஊர்வலத்தில் கலந்துகொண்ட இந்திய வீரர்களுக்கு அவர்கள் கரகோஷம் செய்தார்கள். மாஸ்கோவில் ருஷ்யக் கொடியும், இதர அடையாளங்களும், பிரிடிஷ் கொடியும் ஒன்றாகப் பறந்தன. கெய்ரோவில் 100 நிமிஷங்கள் வரையில் அணிவகுத்துச் சென்ற ஆயிரக் கணக்கான நேசதேசத் துருப்புகள் பேரில் ஜனங்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். பிரிடோரியாவுக்குச் சமீபத்திலுள்ள ராபர்ட் குன்றுகளில் தென் ஆபிரிக்க தேசத்தினர் மேற்படி தினத்தைக் கொண்டாடினார்கள். முதிர்ந்த ராஜ தந்திரியான பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் சொல்லுகிறார் "மனித கால அட்டவணையில் இன்று ஒரு சிறந்த நாள். மனித வர்க்கத்தின் சரித்திரத்தில் இதன் முக்கியத்வத்தைப்பற்றி ஒருவரும் மதித்துச் சொல்லமுடியாது. ஜன சமூகத்தின் நாகரீகத்திற்கே இது ஒரு விசேஷ நாளாக மாறிவிடக்கூடும்.

"நேசதேசங்களின் ஒற்றுமையானது நெருக்கடியான நிலைமையில் உண்டாயிற்று. ஏற்கனவே இருந்தே சர்வதேச சங்கம், சம்பந்தங்கள், கூட்டுறவுகளும் இவைகளுக்குப் பதிலாக ஒரு புதிய பாந்தவ்யம் ஏற்பட்டுவிட்டது. அதாவது அக்கிரம யுத்தத்துக்குட்பட்ட நாடுகளின் ஒற்றுமை உண்டாகியிருக்கிறது. இதைச் சரித்திரத்திலேயே ஒரு புதிய வரையறுப்பாகவும், ஒரு புதிய பிரகாசமான தோற்றமாகவும் நாம் செய்து விடுவோம்."

இந்தியா பூராவிலும் நேசநாடுகளின் ஒன்றுபட்ட முயற்சியின் பயனாக நமக்குக் கிடைத்த மகத்தான வெற்றிகளைப்பற்றி குதூகலப்படுவதற்கும் இடைவிடாது யுத்த முயற்சிகளைச் செய்வதற்கு மறுபடி ஆரம்பிப்பதற்கும் ஒரு அரிய சந்தர்ப்பம் என்று கருதி மேற்படி தினத்தைக் கொண்டாடினார்கள். புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலும் மேற்படி தினத்தன்று அழகிய ஊர்வலமும், ஸமஸ்தான நிர்வாகி அவர்கள் தலைமையின் கீழ் ஒரு பொது ஜனக்கூட்டமும் நடைபெற்றன. நம்பிக்கையும், உறுதியும், புகட்டக்கூடியதும், விரிவான யுத்த விமர்சனமும் அடங்கியுள்ள நிர்வாகியின் சொற்பொழிவு இப்பிரசுரத்தின் மற்றொரு பகுதியில் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஆஸ்திக புத்தியுள்ளவர்களுக்கு இந்நாள் ஒரு நன்னாளாகும். ஒரு புதிய உலக அமைப்பு ஏற்படப்போகிறது. கவிகளும், தீர்க்கதரிசிகளும் நிர்த்தாரணம் செய்த உலக அமைப்புக்கு அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறது. உலகமானது யுத்தக் கொடுமையில் அகப்பட்டு சமாதானமும் நல்லுணர்ச்சியும் எப்பொழுது உண்டாகுமென்று ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றது. அச்சு என்று சொல்லக்கூடிய ஒரு பாபத்தைத் தொலைக்கத்தான் 33 தேசங்கள் ஒன்றுசேர்ந்து முயற்சி செய்து வருகிறார்கள். இப்பிரசுரத்தின் மற்றொரு பகுதியில் 33 நேசதேசங்களின் பெயரும், விஸ்தீர்ணமும், ஜனத்தொகையும் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த ஜாப்தாவை நோக்கினால் இதில் பெரியதும் அதிக பலம் பொருந்திய நாடுகளும் சிறியதும் துர்ப்பலமாகயிருக்கும் நாடுகளும் சேர்ந்திருக்கின்றன. தேசங்களின் மனோபாவமும், ஏராளமான ஐச்வர்வமும், படை பலங்களும், யுத்த தந்திரமும், தலைமை வகிப்பதும் ஒன்றுபட்டுவிட்டதென்பது விளங்கும். பல வேறுபட்ட மனிதர்களும் அக்கரைகளும் ஒரு விசித்திரமான ஒற்றுமையை ஏற்படுத்திவிட்டார்கள். ஆகிலும் லக்ஷியம் ஒன்றென்பதிலிருந்து நெருங்கிய பாந்தவ்யம் ஏற்பட்டிருக்கிறது. இதில் சேர்ந்தவர்களின் சங்கியையை

| ஒரு வருஷத்திற்கு முன்பு. | இப்பொழுது. |
| --- | --- |
| 1942-ம் வருஷம் ஜூன் மாதம் அலூஷியன் தீவுகளிலுள்ள அட்டு, கிஸ்கா ஆகிய இரண்டு இடங்களையும் ஜப்பானிய சைனியங்கள் பிடித்துக்கொண்டன. | 1942-ம் வருஷம் மே மாதம் அமெரிக்கப் படைகள் அட்டுவில் இறங்கியிருக்கின்றன. மால்டா விமானத் தாக்குதலுக்குட்பட்டது போல சில மாதங்களாக கிஸ்காவும் விமானத் தாக்குதலுக்கு உட்பட்டிருக்கிறது. |
| 1942-ம் வருஷம் ஏப்ரல் மாதம் ஜப்பானிய கப்பற்படை வங்காள வளைகுடாவில் வந்து சிலோன், கோகனடா, விசாகப்பட்டனம் ஆகிய நகரங்களின் மேல் குண்டுகள் போட்டன. மே மாதத்தில் மற்றொரு படை கோரல் கடலில் வந்து வடமேற்கு ஆஸ்திரேலியாவின்மீது குண்டுகளைப் போட்டது. ஜூன் மாதத்தில் மத்திய பஸிபிக்கிலுள்ள மிட்வே தீவுகளின் மேல் ஒரு கப்பற் கூட்டத்தை ஜப்பானியர்கள் அனுப்பினார்கள். | 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம், ஸாலமன்ஸிலுள்ள முக்கியமான விமான தளமான கூடல் கனாலை விட்டு ஜப்பானியர் காலியாக வேண்டியதாயிற்று.<br>பேராசை பிடித்த ஜப்பானிய தளகர்த்தர்கள், 6 விமானந்தாக்கி கப்பல்களை இழந்ததால் அப்படியே திணறுகிறார்கள்.<br>6 மாதங்களுக்குமுன் 2 விமானந்தாங்கிக் கப்பல்கள் ஸாலமன்ஸில் மூழ்கடிக்கப்பட்டதிலிருந்து ஜப்பானிய பெரிய யுத்த கப்பல்களை காணுவதேயில்லை.<br>222 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டோ, அமெரிக்க ஸப்மெரின்களால் நாசமாக்கப்பட்டோ, ஜப்பானிய வியாபாரக் கப்பல்களின் எண்ணிக்கை, கடல்கடந்து செல்லுவதற்குப் போதுமான அளவின்றி குறைந்துபோய் விட்டதால் ஜப்பானியர்கள் தங்கள் படையெடுப்பை நடத்தவில்லை. |

## நேசதேச விமானத் தாக்குதல் அதிகமாகிக்கொண்டு வருகிறது.

| சென்ற வருஷத்தில். | இப்பொழுது. |
| --- | --- |
| லூபெக், ராஸ்டாக், கொலோன் ஆகிய நாஸி நகரங்களின்மேல் படையெடுத்து குண்டு போட்டதினால், கோயரிங் திரும்பவும் நேசக் கக்ஷியினரைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இங்கிலாந்தின் பெரிய மாதாகோவில்கள் உள்ள நகரங்களின் மேல் படையெடுத்தான். இதுதான் பழிக்கு பழி வாங்குவதாம். | ராயல் விமானப்படையெடுப்பு ஜெர்மனியின் மேல் மிகவும் அதிகமாய் இருப்பதால் ஜெர்மனியின் பழி வாங்கும் எண்ணத்தோடு வரும் படையெடுப்புக்கள் எல்லாம் சிறிதும் பயனில்லாமல் போகின்றன. அதுவே போலத்தான் அதைப்பற்றி அவர்கள் செய்யும் பிரசாரங்களும் நம்பப்படுவதில்லை. |
| லூபெக்கின் மேல் 1942-ம் வருஷம் மார்ச்சு மாதம் 28-ம் தேதி ராயல் விமானப்படை நிமிஷத்திற்கு 2 டன் அளவாக 340 டன் குண்டுகளைப் போட்டது. | 1943-ம் வருஷம் ஏப்ரல் 26-ம் தேதி டூயிஸ்பார்க் என்னும் நகரின் மேல் நிமிஷத்திற்கு 30 டன் அளவாய் 1,360 டன் நிறையுள்ள குண்டுகளை ராயல் விமானப்படை வீசியது. |
| ஜெர்மனியின் லக்ஷியங்களின்மேல் போடப்பட்ட கனமான குண்டுகளின் நிறை 4,000 பவுண்டுகளாகும். | ஜெர்மனியின் லக்ஷியங்களின் மேல்போடப்பட்ட கனமான குண்டுகளின் நிறை 8,000 பவுண்டுகளாகும். |
| ராயல் விமானப்படை கடலில் சொல்பமாக சுரங்க வெடி பாவினர். | 1943-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் சேர்ந்தாற்போல் 27,28 ஆகிய இரண்டு நாட்களில் இரவுகளில் சாதாரணமாக ஒரு மாதத்தில் போடக்கூடிய அளவிற்கு மேற்பட்டு, எதிரிகளின் ஜலப்பிராந்தியங்களில் சுரங்க வெடிகள் போடப்பட்டது. |

"இந்த யுத்தத்தில் எவ்வளவு கஷ்டங்கள் நேரிட்டாலும் பொருட்படுத்தாது யுத்தத்தை நடத்தியே தீருவோம்."

"யுத்தத்தின் பெருமையை பறைசாற்றிவந்த இந்தக்குற்றவாளிகள் யுத்தம் முடியும் முன் சமாதானத்தின் குணாதிசயங்களைப் புகழ ஆரம்பித்து விடுவார்கள்."

வி வி வி வி வி

**ஹிட்லரின் சங்கடம்.** காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் பேசியபொழுது, ஸ்பின்க்ஸ் போல் சில புதிர்களை எதிரிக்கு விடுத்தார். ஹிட்லர் அவர் பேச்சைக் கேட்டு நேசநாடுகள் என்னசெய்யப் போகிறார்களோ என்று கலக்கம் கொண்டிருக்கிறான். மிஸ்டர் சர்ச்சில் சொற்பொழிவின் ஒரு பகுதியில் "பலமானதும் பயங்கரமானதுமான இருவகைப்பட்ட யுத்தமென்றும்", மற்றொரு இடத்தில் "விமானங்கள் மூலம் பூராவாக நொருக்குதல்" என்றும் பலவிதமாகப் பேசியிருக்கிறார். விமானத் தாக்குதலால் மட்டும் வெற்றி கிடைத்துவிடுமாவென்பது ஒரு பெரிய பிரச்னையாகும். அதைப்பற்றி சர்ச்சை இங்கு அவசியமில்லை. ஹிட்லர் ஆலோசனை செய்ய வேண்டியதாயிற்று என்பது நிச்சயம். ஹிட்லரைத் துன்புறுத்தும் பிரச்னைகள் பின்வருமாறு. "தாக்குவதா, இல்லையா," "முன்னேறி யுத்தம் செய்வதா அல்லது தற்காப்பு முறையை அனுஷ்டிப்பதா" "இருப்பதா அல்லது இறப்பதா." இப்பொழுது நேசநாடுகள் ஐரோப்பா மீது படையெடுப்புச் செய்யாவிட்டால் கிழக்குப் போர்முனையை முடித்துவிட ஹிட்லர் ருஷ்யாவைத் தாக்கவேண்டும். படையெடுப்புக்காக நேசநாடுகள் தயார்செய்துவிட்டால் ருஷ்யப்போரை நிறுத்தி ஐரோப்பாவைக் காப்பாற்றப் போதுமான படை பலத்தை ஹிட்லர் தயாரித்து வைக்கவேண்டும். ஆகையால் ஹிட்லர் இச்சமயம் ஆரம்பிக்கும் எந்த நடவடிக்கையும் துன்பத்தை விளைவிக்கும். ஹிட்லரின் பிடிவாதத்தினால் அநேக கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிட்டன. ஸ்டாலின்கிராட்டிலும், டுனிஸியாவிலும் அவன் அவமானமடைந்துவிட்டான். மற்றொரு தரம் தவறான நடவடிக்கையை அவன் செய்ய மாட்டான். ஆகையால் மிஸ்டர் சர்ச்சில் ஹிட்லரை கலங்கும்படி செய்துவிட்டார். யுத்த ஆரம்பத்தில் ஹிட்லர் நேசநாடுகளைக் கலங்கும்படி செய்தான். இப்பொழுது நம்முடைய முறை வந்துவிட்டது. ஹிட்லருக்குத் திடமான புத்தியில்லை. இங்கிலையேற்பட்டால் சீர்கேடும் சம்பவித்துவிடும்.

வி வி வி வி வி

**விமான யுத்தம்.** நேசநாடுகளின் தரைப்படைகள், வட ஆபிரிக்க யுத்தத் துக்குப்பின் சிரமப்பரிகாரம் செய்துகொண்டும், மறு யுத்தத்துக்குத் தயார்செய்து கொண்டுமிருக்கும் பொழுதும், கடற்படை சிறிய சண்டைகளில் கலந்துகொண்டு எதிராளியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டுமிருக்கும் பொழுதும், விமானப் படையானது யுத்தத்தை நடத்திவருகிறது. வெடி குண்டுகளால் யுத்தத்தில் வெற்றி பெற்றுவிடலாமென்று கொள்கையுள்ளவர்கள் இந்த அவகாசத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். அவர்களின் கொள்கை முடிவுபெற்றாலும் பெறாவிட்டாலும், எதிரியின் பிரதேசங்களை நொருக்கிவிட வேண்டுமென்ற நோக்கத்தை நேசநாடுகள் பூர்த்தி செய்துவிடும். எதிரியை முற்றிலும் முறியடிக்க முடியாவிட்டாலும் நேசதேசங்களின் படையெடுப்புக்கு இவைகள் முற்போக்கான முறைகள். ஐஸ்லாந்திலிருந்து எகிப்து வரையிலுள்ள பிரதேசங்களை பிரிடிஷ் வெடி விமானங்கள் தாக்குவதின் பிரயோஜனமும் இந்த அபிப்பிராயத்தையொட்டித்தானிருக்கிறது. தரைப்படைப் பகுதிகள் போல் ஏராளமான விமானங்கள் இரவு பகலாக வேலை செய்துவருகின்றன. யுத்த முறையானது இப்பொழுது அடிக்கடி தாக்குவதென்பதில்லை. பலமான குண்டுகளை வீசி எதிரியின் யுத்தத் தொழிற்சாலைகளுள்ள பிரதேசங்களை அழித்துவிடுவதுதான் நமது லக்ஷியம். டெயிலி மெயில் பத்திரிகையில் விமான நிருபர் மிஸ்டர் காலின்பாடினால் இது விஷயமாக ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். ரூர் பிரதேசத்தை அழிப்பதற்காக நடைபெறும் சண்டையைப்பற்றியும் ஸ்வாரஸ்யமான சில அபிப்பிராயங்களையும் வெளியிட்டிருக்கிறார்.

"சாதாரண மனிதர்கள் அறியக்கூடாதபடி, ஜெர்மனியின் யுத்த முயற்சிகள் பூராவையும் நாம் பலமாகத் தாக்கி வருகிறோம். ருஷ்யாவைத் தாக்குவதற்கு ஜெர்மனி எவ்வித திட்டங்களைத் தயாரித்திருந்த போதிலும் போர்முனைக்கு அனுப்ப யுத்த தளவாடங்களின் குறைவு நிச்சயம் ஏற்படுமாகையால் ஜெர்மனி யுத்த தந்திரத்தைத் திருத்தியமைக்க வேண்டியதுதான். ஜெர்மன் மக்களின் மனோதிருப்திக்காக ருஷ்யாவில் மறுபடியும் யுத்தம் ஆரம்பிக்க வேண்டுமென்று ஹிட்லர் உத்தேசித்தாலும், மூன்று மாதங்களுக்கு முன்னிருந்ததுபோல் இப்பொழுது தாக்குதல் வலுவாகயிருக்க முடியாதென்பது நிச்சயம்.

"சமீபத்தில் எஸ்ஸன், டார்ட்மண்டு, டஸ்ஸல்டார்ப் முதலிய அநேக இடங்களிலுள்ள தொழிற்சாலைகளை நாம் அழித்ததிலிருந்து ராணுவ நிலைமையில் முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. எஸ்ஸனைத் தாக்கியதிலிருந்து க்ரப்ஸ் ஓர்க்ஸைச் சேர்ந்த 300 தொழிற்சாலைகள் பலமாகப் பழுதுபட்டன. இவைகளில் 200 முற்றிலும் அழிந்துவிட்டதினால் ஒரு நாளைக்கு 1,000 ராணுவ வண்டிகளும், 150 ரெயில்வே எஞ்ஜின்களும் உற்பத்திக் குறைவு ஏற்பட்டுவிட்டது. மேமீ 23-ம் தேதி விமானத் தாக்குதலின் பின் டார்ட்மண்டில் புகைப்படம் பிடித்தபொழுது அந்த இடத்தில் தொழிற்சாலைகளின் சின்னங்களே காணப்படவில்லை. நகரம் பாழாகி விட்டது. ரூர் பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகள் பூராவையும் பிரிடிஷ் விமானப்படை அழித்துவிடுமாகில் யுத்தத்திலேயே நேசநாடுகளுக்கு மகத்தான வெற்றி கிடைத்ததாகும்".

வி வி வி வி வி

**சரமாரியாக குண்டு வீசுவது.** விமானப்படையினர் இப்பொழுது புதிய முறையில் தாக்குதல் செய்துவருகிறார்கள். பலமான தற்காப்புகள் உள்ள ஸ்தலங்களைக் குறைந்த நஷ்டத்துடன் பலமாக குண்டு வருஷத்தினால் தகர்ப்பது என்பதுதான் இப்புதிய தந்திரம். ஒரு குறிப்பிட்ட லக்ஷியத்தின்பேரில் ஒரு சிறிய காலத்துக்குள்ளாக ஏராளமான விமானங்களிலிருந்து வெடிகுண்டுகளை வர்ஷித்து, எதிரி விமான எதிர்ப்பு பீரங்கிகளையோ, சண்டைவிமானங்களையோ அல்லது பொதுஜனத் தற்காப்பு முறைகளையோ உபயோகப்படுத்தமுடியாமல் செய்துவிடுகிறது. தாக்குதல் செய்யும் விமானங்கள் அதிக வேகமாகச்செல்லுவதால் விமான எதிர்ப்பு பீரங்கி ஒரு விமானத்தைத்தான லக்ஷியமாகக்கொள்ளகூடும் அப்பொழுது ஆறு விமானங்கள் வெடிகுண்டுகளைத் தள்ளிவிடும். இந்த நடவடிக்கைகளில் மஸ்கிடோ விமானம்தான் கியாதிபெற்றது. உலகத்திலேயே இந்த விமானம்தான் அதிக வேகமுள்ளது. பலமான தாக்குதல் செய்வதற்கும் உயர்வான விமானம்.

வி வி வி வி வி

**ஜலாசயங்களை உடைத்துவிடுவது.** பிரிடிஷ் விமானப்படை ஜலாசயங்களை உடைத்துவிடுவதிலும் திறமை காட்டியிருக்கிறது. ரூர் அணைக்கட்டுகளை உடைத்ததிலிருந்து இது புலப்படுகிறது. சரியான இலக்கில் பலமான குண்டுகளை வீசி அணைகளை உடைத்துவிடுவதுதான் இதன் மர்மம்.

வி வி வி வி வி

**ஜெர்மன் விமானப்படையின் வீழ்ச்சி.** எவ்விதத்திலும் ஜெர்மன் விமானப்படையின் உயர்வு பயன்படவில்லை. வட ஆபிரிக்காவிலிருந்து துரத்தியடிக்கப்பட்டது. மத்தியதரைக்கடலிலிருந்து விரட்டியடிக்கப்படுகிறது. மேற்கு பக்கத்தில் நொருக்கப்படுகிறது. கிழக்குப் போர்முனையிலும் அது விரட்டியடிக்கப்படும். தற்சமயம் ருஷ்யாவில் ஜெர்மானியர் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளை ருஷ்ய விமானப்படை தகர்த்துவருகிறது. கோமல், காராசெவ், ஸ்மாலென்ஸ்க் போன்ற முக்கியமான நாச் சந்திகள் வெடி விமானங்களால் தாக்கப்படுகின்றன. ஜூன் மாதம் 2-ம் தேதியன்று குர்ஸ்க்கை 500 ஜெர்மன் விமானங்கள் தாக்கியபொழுது ஜெர்மனிக்கு 163 விமானங்கள் நஷ்டமாயின. ஜூன் மாதம் 4-ம் தேதி ஜெர்மன் ஸப்ளை தளமான ஓரெலை 520 ருஷ்ய விமானங்கள் தாக்கியபொழுது ஒரே ஒரு விமானம்தான் நஷ்டமாயிற்று.

வி வி வி. வி வி

**வினையிட்டவன் வினையறுப்பான்.** நாஸிகள் உண்டுபண்ணின வெடி விமானங்களே அவர்களை நாசம் செய்துவருகின்றன. தன்வினை தன்னைச் சுடும் என்பதுபோல் நாஸிகள் அனுபவிக்க வேண்டியதாகயிருக்கும்பொழுது கோயபல்ஸ் ஒலி பரப்பில் எதிரிகள் காட்டுமிராண்டித்தனமாக வெடிகுண்டுகளை வீசுகிறார்களென்று சதா காலமும் அலறிக்கொண்டிருக்கிறான். ஒருக்கால் பிரிடிஷாரின் மனதுறுகும்படி செய்ய வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறான் போலும். ஜன சமூகத்தினிடம் அனுதாபத்தினாலும் அனாவசியமாக குண்டுகளைச் செலவழிக்காமலிருக்க வேண்டுமென்ற எண்ணத்தினாலும் பிரிடிஷ் வெடி விமானங்கள் தொழிற்சாலைகளில்லாத பொது ஜனங்கள் வசிக்குமிடங்களில் குண்டுகளைப்போடுவதேயில்லை. பிரிடிஷாரின் திட்டப்படி ஜெர்மன் மக்களை அழித்துவிட வேண்டுமென்ற அபிப்பிராயமேயில்லை.

**விம்மியழுதல்** அச்சு நாட்டார்கள் இவ்விதமாக சமீப காலத்தில் விம்மி அழுவதைக் கண்டனம் செய்து ஊலுஸ் பத்திரிக்கையில் தருக்கிய பத்திராதிபரான M. ஸெமர் பின்வருமாறு எழுதுகிருர். "விமானத் தாக்குதலால் ஏற்பட்ட நஷ்டங்களைக் கண்டு துன்பமடையாமல் ஒருவரும் இருக்க முடியாது. பிரசார முறையில் இந்தத் துன்பத்தை வெளியிடும்பொழுது மனதில் துவேஷமுண்டாகுகிறது. அச்சு நாடுகள்தான் முதன் முதலில் மகத்தான விமானப்படையைத் தயாரித்து ஏராளமான விமானங்களைக்கொண்டு நகரங்களை அழிக்க ஆரம்பித்தார்கள். இப்பொழுது அவர்களுடைய எதிரிகள் அதே முறையைக் கையாளும்பொழுது அவர்களிடம் ஜெர்மானியர்களுக்குக் கோபம் வருகிறது. 1940-ம் வருஷம் வேனிர் காலத்துக்கு முன் பிரிடிஷார்கள் லண்டன், பிரிஸ்டல், லிவர்ப்பூல், கவென்டரி, கான்டர்பரி போன்ற பெரிய ஜெர்மன் நகரங்களை வெடி விமானங்களால் தாக்கினர்களென்று நாம் கேள்விப்படவில்லை. ஜெர்மன் நகரங்களை நேசநாடுகள் தாக்கக்கூடிய நிலைமை ஏற்படக்கூடுமென்று அப்பொழுது ஜெர்மானியர்கள் எண்ணம் கொள்ளவில்லை. விமானத்தாக்குதலின் கொடுமைகளை இப்பொழுதுதான் ஜெர்மானியர்கள் அறிகிருர்களென்பது ஜெர்மன் புகாரிலிருந்து தெரியவருகிறது. இந்தப் பச்சாத்தாபம் பிரயோஜனப்படாது."

வி வி வி வி வி

**நாசகரமான வருஷவிழா.** ஜூன் மாதம் 10-ம் தேதியன்று இதாலி யுத்தத்தில் ஈடுபட்ட மூன்ருவது வருஷ முடிவு விழா கொண்டாடப்பட்டது. அன்றையத்தினம் இதாலியைச் சேர்ந்த பான்டலேரியா தீவு சரணடைந்தது. அதிலிருந்து 36 மணிகளுக்குள்ளாக லாம்பெடோஸா என்ற தீவும் சரணடைந்தது. இதை வசப்படுத்தியவர் அத்தீவில் துரதிருஷ்டவசமாக இறங்கிய பிரிடிஷ் விமானப்படைச்சேர்ந்த ஸார்ஜெண்ட் ஒருவர். அதற்குப்பின் லாம்பிஸின், லிமோஸா என்ற இன்று தீவுகள் பிடிபட்டுவிட்டன. இந்த மூன்று தீவுகளும் சேர்ந்து இஸோலா பலாகி என்று பெயருள்ளவை. ஸிஸிலிக்கும் டிரிபோலிக்கும் மத்தியிலிருக்கின்றன. இந்தக் குறுகிய கடல்வெளியைப் பாதுகாக்கின்றன. இவைகளும் பான்டலேரியாவும் வசமானதிலிருந்து மத்திய தரைக்கடலின் மேற்கிலிருந்து கிழக்குப் பிரதேசத்திற்குச் செல்ல வசதி ஏற்பட்டுவிட்டது. ஸிஸிலியையும் ஏஜியன் கடலிலிருக்கும் லக்ஷியங்களையும் இதாலியையும் தாக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. எதிரிகளின் அதோகதி சமயம் கிட்டிவிட்டது. மத்திய ஐரோப்பாவிலிருந்தும் வட ஐரோப்பாவிலிருந்தும் இதாலிக்கு ஸப்ளைகள் வரும் மார்க்கமான காட்கார்ட் ஆல்பைன் கணவாய் நாசமாகிவிட்டது. காட்கர்ட் வழியாகத்தான் இதாலிக்கு நிலக்கரியும் ஸப்ளை செய்யப்பட்டுவந்தது. 10 நிமிஷங்களுக்கொருதரம் 150 ரெயில் வண்டித் தொடர்கள் இந்தக் கணவாய் வழியாகச் செல்லுகின்றன. ஒரு வாரம் போக்குவரவு தடைபட்டால் 1,000 ரெயில் வண்டி சாமான்கள் நின்றுபோய்விடும்.

இதாலியின் அதோகதி நிச்சயம். பான்டலேரியா வீழ்ச்சியைக் கேட்டபின் ஜனதிபதி ரூஸ்வெல்ட் சொன்னதுபோல இதற்குக் காரணம் முஸோலினியின் முட்டாளதனம்தான். மிஸ்ட்டர் கார்டல் ஹல் சொல்லுகிறபடி "அவன் ஜனங்களின் துரோகி. ஜனசமூகத்தின் சட்டதிட்டங்களையும் புரக்கணித்தவன்."

வி வி வி வி வி

**கிராட், டிகால் கக்ஷிக்காரர்கள்.** கிராட்கோஷ்டியினரும், டிகால் கோஷ்டியினரும் அவர்களின் தலைவர்களும் தங்கள் வித்யாசங்களை மறந்து காலதாமதமன்னியில் யுத்தத்தில் வெற்றிபெறவேண்டிய லக்ஷியத்துக்காகப் பாடுபடவேண்டுமென்று நினைக்கிரோம். உத்தியோகத்துக்கும் அதிகாரத்துக்கும் சண்டையிட்டுக்கொள்ளுவது ஆபாசமாகயிருக்கிறது. தேசிய ஸ்வதந்திரக்கமிட்டி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு சண்டையிட்டுக் கொண்டிருக்கும் வகுப்பினரை அது சமரசப்படுத்த முயலுகிறதென்பது விசேஷமான நடவடிக்கை. இந்தப்புதிய ஏற்பாட்டில் கிராட் சேனதிபதி உத்தியோகத்லதயும் டிகாலி யுத்த மந்திரி ஸ்தானத்தையும் ஏற்றுக்கொள்ளுவார்களென்று நினைக்கலாம்.

வி வி வி வி வி

**எகிப்தும், ருஷ்யாவும்.** கோமிண்டர்னைக் கலைத்துவிட்டதாக ஸ்டாலின் வெளியிட்டதினின்றும் டாக்டர் கோயபல்ஸின் போல்ஷிவிக் பூச்சாண்டிப் பிரசாரம் அடியோடு வேரறுபட்டுவிட்டதென்பதற்கு அத்தாக்ஷியாக எகிப்து ருஷ்யாவுடன் மறுபடியும் ராஜ தந்திர சம்பந்தங்களை ஏற்பாடு செய்துகொண்டதென்பது கவனர்கமுள்ளது.

ஜப்பானிர்களிடம் லேசான முஸ்தீப்புகளிருந்தன. அவைகளை அவர்கள் குதிரைகள் பேரிலும், கூலிகள் மூலமாகவும் கொண்டுபோனார்கள். காடுகளில் சண்டைசெய்யும் துருப்புகளும் தயாராகயிருந்தன. மோட்டார்களையும் அவைகள் செல்லக்கூடிய ரஸ்தாக்களையும் நாம் நம்பியது, நமக்குப்பெரிய அசௌகரியமென்றும் அவர் சொன்னார்.

இந்த உலகத்திலேயே ஜப்பானைப்போல வெடிகுண்டுகளின் மத்தியில் துருப்புகளை இறக்குவதில் பயிற்சிபெற்றதோ அல்லது சாதுர்யம் வாய்ந்ததோ உள்ள மற்றொரு தேசம் கிடையாதென்று சொல்லலாம். தென்மெற்கு பஸிபிக்கிலுள்ள உஷ்ணமான கடற்கரைப் பிரதேசங்களில் ஜப்பான் இறங்கிவிட்டால், ஜப்பானுக்கு அனுகூலம் அதிகம். காடுகளில் யுத்தம் செய்வதில் அவனுக்குச் சமானமானவன் ஒருவரும் கிடையாதென்று ஜப்பான் காட்டிவிட்டது. பர்மாவில் பயிற்சிபெற்ற படானில் யுத்தம் செய்த பிலிபைன்ஸ் கெண்ட் படைகளும், 31-வது காலாட்படையும் ஜப்பானியர்களைப்போலவே காடுகளில் யுத்தம் செய்வதில் பயிற்சிபெற்று பழக்கப்பட்டவர்களென்றாலும், ஜப்பானிய சேனையைப்போல ஒன்று பட்டு யுத்தம் செய்வதில் சிறந்தவர்களல்ல.

யுத்த தந்திரங்களை ஜப்பானியர்கள் ஜெர்மானியர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள். ஜப்பானியர்கள் முன்னேறித்தாக்கும் முறைகளை அனுஷ்டிக்கிறவர்கள். எதிரியின் விலாப்பக்கத்தைத்தாக்கி எதிரியை சுற்றி வளைத்துக்கொள்ளுவதுதான் அவர்களின் யுத்த தந்திரம். இதைத்தவிர போர்முனையில் கபடமாக எதிரியின் பின்புறம் செல்லும் முறையும் அனுஷ்டிக்கப்படுகிறது. இவை இரண்டும் சேர்ந்து எதிரியின் முன்னணிக்குப் பின்னால் வலுவான ஒரு ஜப்பானிய பலத்தை உண்டுபண்ணி விடுவதோடு, ஸப்ளை மார்க்கங்களும் இதன் மூலம் துண்டிக்கப்படுகின்றன. மலேயாவில் இம் முறைகள்தான் அடிக்கடி கையாளப்பட்டன. பிரிடிஷார்கள் கிழக்குப் பிராந்தியத்தில் மோட்டாரின் யுத்த முறைகளை உபயோகித்தது தவறு.

சிங்கப்பூரில் பீரங்கிகள் குண்டுகளை வர்ஷித்தன. படையெடுப்புக்குள்ளாகும் நாட்டு மக்களின் உடையை அணிந்துகொண்டு ஆயிரக்கணக்கான ஜப்பானியர்கள் கபடமாக அயல் நாட்டுக்குள் புகுந்துவிடுவதும், இவர்களுக்கு உதவியாக ஐந்தாம் படையினரும் அதிருப்தி உள்ளவர்களும் வேலை செய்வதும், எதிரி பின்வாங்குவதற்குப்போதுமான காரணங்கள். இது நடைபெறுவிட்டால் ஜப்பானியர்கள் இருவிலாப் பக்கங்களிலும், நேர்முகமாகவும் பின்புறமிருந்தும் தாக்க ஆரம்பிக்கிறார்கள். யுத்த களத்திலுள்ள பீரங்கிகளும் அவர்களுக்கு உதவியளிக்கும். சிங்கப்பூர் தீவைத் தாக்கியதில் பீரங்கிகள் முக்கியமான வேலை செய்தன. கீழ்த் திசையில் சிங்கப்பூரை பீரங்கிகள் தகர்த்தது போல் ஒரு இடத்திலும் நடைபெறவில்லை. எதிரியைத் தாக்குவதுதான் முக்கிய நோக்கமாகும்.

இந்தத் தந்திரங்களை முறியடிப்பதற்குச் சலபமான முறைகள் இருக்கின்றன. எதிரியைவிட அதிகமான தந்திர முறைகளை நாம் கையாளவேண்டும். அமெரிக்காவின் வனாந்தர வாசிகளின் நடையுடைபாவனைகளை நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இந்தியாவின் யுத்தங்களை நாம் ஆராய்ச்சி செய்யவேண்டும். இத்துடன் நின்றுவிடக்கூடாது. ஜப்பானியர்கள் தரையிலும் சமுத்திரத்திலும் சண்டை செய்வதில் திடமானவர்கள். அவனிடம் சில குறைபாடுகளுமிருக்கின்றன. அவனுடைய படைப் பகுதியும், டிவிஷனும் நம்மைவிடக் குறைவான ஆயுதங்களைப் பெற்றிருக்கின்றது. ஜப்பானியர்களிடம் யந்திர சாதனங்கள் அதிகமில்லை. டாங்கிகள் அதிகமாகயில்லை. டாங்குப் படைகள் மட்டும் தயாராகியிருக்கின்றன. சமவெளிகளில் நவீன யுத்தத்தில் உபயோகப்படுத்தப்படும் யந்திர சாதனங்கள் நமக்குப் பயன் அளிக்கும். ஜப்பானியர்களுக்குப் பாதகமளிக்கும். நாம் அவர்களைவிட அதிக மேன்மை அடைந்து டோக்கியோவைத் தாக்கியதுபோன்ற காரியங்களைச் செய்துவந்தால் அவர்களுக்குத் திகில் உண்டாகி அவர்கள் தவறான காரியங்களைச் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள்.

## கனமான உடுப்புகள்.

இதை மட்டும் நாம் நம்பியிருக்க முடியாது. உடுப்பணிந்த மஞ்சூரியாவிலுள்ள ஜப்பானிய குவாண்டங் சேனையானது ருஷ்யாவின் குளிரை அனுபவித்துப் பழக்கமடைந்து இருக்கிறது. சமவெளிகளில் யுத்தம் செய்வதற்கும் பயிற்சி பெற்றிருக்கிறது. ஜப்பானியர்கள் பனிக்கட்டி மேல சண்டைபோடும் துருப்புகளையும் மலைகளில் சண்டைபோடும் துருப்புகளையும் தயார் செய்திருக்கிறார்கள். ருஷ்ய ஜப்பான் எல்லைச் சரங்கத்தில் நடைபெற்ற மூவாயிரக்கணக்கான சில்லரைச் சண்டைகளில் ஒன்றான செக்குபங்கு குன்று போரில் ஜப்பானியர்களுக்கு ருஷ்யத் துருப்புகள் ஏராளமான மனித நஷ்டத்தையும் முஸ்தீப்பு நஷ்டத்தையும் விளைவித்தன. ஆகிலும் அவர்களுடைய முரட்டுத்தனத்தையும் ஊக்கத்தையும், ஜப்

கொண்டிருக்கிறன. கிரீஸ் தேசத்திலும், இதர நாடுகளிலும் கிரேக்கர்கள் தான் எதிர்த்து வருகிறார்கள். கிரேக்கர்கள் ஒருபொழுதும் தோல்வியடையமாட்டார்கள். விடுதலை பெற்று கிரேக்கர்கள் மறுபடியும் அக்ரீ பொலிஸ், பார்தினன் உள்ள கட்டடங்களில் அரசாங்கம் நடத்தும் காலம் வந்துவிடும்.

இந்த நாள் கிட்டிவிடவேண்டுமென்று நம்பிக்கைகொண்டு நாம் பிரார்த்தனை செய்வதுடன் கிரேக்க அரசாங்கத்துக்கும், கிரேக்கர்களுக்கும் நம்முடைய நட்பை வெளிக்காட்டுவதற்காக இந்த ரோந்துக் கப்பலை நாம் அனுப்புகிறோம்.

---

## ஜப்பான் ஆஸ்திரேலியாவை இப்பொழுது தாக்கமுடியாது.

(மிஸ்ட்டர் ஜான் கர்டின்—ஜூன் 10).

ஐரோப்பிய யுத்தத்தைப்போலவே, பஸிபிக் போர்முனையிலும் யுத்தத்தை பலமாக நடத்துவோம் என்று ஜனாதிபதி ரூஸ்வெல்டும், மிஸ்ட்டர் சர்ச்சிலும் தீர்மானித்துவிட்டதிலிருந்து ஜப்பானியருக்கு மனக்கலக்கமும் கோரமான தோற்றங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அதிகச் சிரமப்பட்டு நாம் எதிரியை சமாளித்து வந்தோமென்பது உலக யுத்த தந்திரத்தில் ஒரு பெரிய கடமையாகும். அதை நாம் சரிவரச் செய்துவிட்டோம்.

பிரிடனுக்கு ஏற்பட்டதுபோல் நமக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. பவளக் கடல் யுத்தத்தில் நாம் வெற்றி பெற்றோம். ஆஸ்தரேலிய சாம்ராஜ்யப்படை திரும்பி வந்தபடியால் நியூகினியாவில் எதிரி முன்னேற்றத்தைத் தடுக்க நமக்கு சௌகரியமேற்பட்டது. ஜப்பான் இபபொழுது ஆஸ்திரேலியா மீது படையெடுக்குமென்று நான் நினைக்கவில்லை.

நம்மிடமுள்ள படைப்பலமும், மிட்வே தீவுகளிலும் ஸாலமன்ஸ் தீவுகளிலும் ஏற்பட்ட வெற்றியின் மூலம் அமெரிக்கக் கடற்படையின் பலத்தினாலும் ஏற்பட்ட கடலாதிக்கமும் சேர்ந்து நாம் எதிரியைச் சமாளிக்க முடியுமென்றும் ருஜுச் செய்துவிட்டோம்.

ஆகிலும் ஜப்பானிய வெடி விமானங்களின் அட்டூழியங்கள் நின்றுவிடவில்லை. அதன் மூலம் சேதமும், நஷ்டமும் நமக்கு ஏற்படலாம். ஆகிலும் ஆஸ்திரேலிய தளத்திலிருந்து ஜப்பான் பேரில் சிறியதும், மகத்தானதுமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம். இந்த நோக்கத்துடன்தான் பஸிபிக் சமுத்திரத்தில் நேசதேசத்தார்கள் போட்டிருக்கும் திட்டத்துக்கு ஆஸ்திரேலியாவின் யுத்த முயற்சிகள் நிறுவப்படவேண்டும்.

எப்பொழுதும்போல் எனக்கும் ஜெனரல் மாக் ஆர்தருக்கும் உள்ள சிநேகபாவமிருந்து வருகிறது. ஆஸ்திரேலியாவுக்கு நெருக்கடியான சமயத்தில் இங்குவந்து, பஸிபிக்கில் நேசநாடுகளின் நடவடிக்கைகளைச் சரிவர நடத்துவதற்கு ஆஸ்திரேலியா முக்கிய தளமாக உதவும்படி ஏற்பாடுகள் செய்வித்த ஜெனரல் மாக் ஆர்தருக்கு நாம் நன்றிசெலுத்துகிறோம்.

---

## விமானப்போர் வெற்றியளிக்கும்.

---

(அமெரிக்க முதல் விமானப்படையின் தளகர்த்தரான மேஜர் ஜெனரல் ரால்ப் ராயிஸ்—ஹாப்டன் ஜூன் 5).

ஜெர்மனியை வெடிகுண்டுகளால் தாக்கியே நாம் சமாதானத்தை நிலைநாட்டுவோம். அக்கிரமச் சண்டை ஆரம்பித்தபிறகு இன்றுதான் ஜெர்மனி யுத்தத்தின் கொடுமைகளை அறிய ஆரம்பித்திருக்கிறது. ஜெர்மனியை வெடிகுண்டுகளால் தவிடுபொடியாக்குவதன் மூலம் ஜெர்மானியர்கள் நிபந்தனையற்ற சரணாகதியடையும்படியாகவும் நாம் செய்துவிடுவோம்.

இப்பொழுதே அநேக ஜெர்மானிய நகரங்கள் பாழாகிவிட்டன. ஆகிலும் ஜெர்மனி நம்முடைய வலிமையை இன்னும் அறியவில்லை. பறக்கும் கோட்டை விமானங்களும், லிபரேட்டர்களும், மகத்தான வெடி விமானங்களும் பெர்லின்பேரிலும் மற்ற ஸ்தலங்கள் பேரிலும் வட்டமிட்டு கனமான பெரிய வெடிகுண்டுகளை வீசும்பொழுதுதான் ஜெர்மனிக்குப் புத்திவரும்.

நாம் சேகரித்துவைத்திருக்கும் பலமான சேனைகளை ஐரோப்பாமீது படையெடுக்கும்படி செய்தால் ஆயிரக்கணக்கான ஜனங்களை ரக்ஷிக்கக்கூடும். சென்ற சில மாதங்களாக ஜெர்மனியையும், இதாலியையும் நமது வெடிவிமானங்களும், சண்டை விமானங்களும் தவிடுபொடி செய்துவருகின்றன.

யுத்தம் முடிவுபெறுவதற்குமுன் ஆகாயத்திலிருந்து ஜெர்மனியை எவ்வளவுதூரம் நாம் அழித்துவிடுகிறேமோ, அவ்வளவுதூரம் நிரந்தரமான சமாதானம் உலகத்தில்யேற்படும் என்று நான் நம்புகிறேன்.

### ஜப்பானையும் அடிக்கவேண்டும்.

சழுகின் கூட்டிலிருப்பவைகளை அபகரிக்கும் ஒருவனுடைய கண்களை கழுகு பிடுங்கி விட்டால் அவன் மறுபடியும் திருட்டுத்தொழில் செய்யமாட்டான். அதுபோல, பெர்ல் துறைமுகத்தில் நடைபெற்றதுபோல ஜப்பானை பலதடவைகள் நாம் தாக்கவேண்டும். அதன் மூலம் நமது பெயரைக்கேட்டமாத்திரத்தில் ஜப்பானியக் குழந்தைகள் நடுக்கமடைய வேண்டும். மேஜர் ஜெனரல் டூலிட்டில் 16-விமானங்களைக்கொண்டு ஜப்பானைத்தாக்கினர். ஜப்பானை நாம் பலமாகத்தாக்கும்பொழுது இதைவிட 100-மடங்கு அதிகமான அதாவது 1,600-விமானங்களை உபயோகிக்கப்போகிறேம்.

ஒரு யுத்தத்திலும் தோல்வியடையவில்லையென்று ஜப்பானியர்கள் பீத்திக்கொள்ளுகிறார்கள். இது காரணத்தினுல்தான் அவர்கள் நம்மைத்தாக்க ஆரம்பித்தார்கள். அவர்களை முறியடிப்பதோடுமில்லாமல், அவர்களை நன்ருய் நசுக்கி, நகரங்களையும் தீக்கிறையாக்கியும், ஜனங்கள் மலைகளுக்கு ஓடும்படிக்கும்செய்து, எந்நாளும் அவர்கள் மறக்காதபடிக்கும் இனிமேல் துணிவுகரமான செய்கைகளை ஆரம்பிக்காதபடிக்கும் நாம் செய்துவிடுவோம்.

---

## விமான நடவடிக்கைகளின் விளைவுகள்.

அச்சுநாடுகளின் விமான பலக்குறைவினின்றும் வட ஆபிரிக்காவில் நிலப் போர் நின்றுவிட்டது மட்டுமல்ல. டூனிஸியாவில் கடைசியாக அச்சுநாடுகள் எதிர்த்து நின்றபொழுது, 1939-ம் வருஷம் போலந்திலும், 1940-ம் வருஷம் பிரான்ஸிலும் ஜெர்மானியர்களும், இதாலியர்களும் வெடி விமானங்களால் நஷ்டம் விளைவித்ததைவிட அவர்கள் அதிகமான தாக்குதல்களுக்கு உட்பட்டிருக்கிருர்கள். நடவடிக்கைகளைக் கண்ணுற்றவர்கள் நமது விமானப்படையின் உயர்வினுல் குண்டு மாரிகள் யுத்த முறையைப் போலிராமல் வேடிக்கை காட்டுவது போலிருந்தன என்று சொல்லுகிருர்கள். ஒரே நாளில் 2,500 தடவை விமானங்கள் பறந்து சென்றன என்று கணக்கிடப்படுகிறது.

டூனிஸியாவில் அச்சுநாடுகளின் வீழ்ச்சிக்குப்பின் நமது விமானப்படை பூராவும் மத்திய தரைக்கடலிலுள்ள இதாலியப் பிரதேசங்களை முழுபலத்துடன் தாக்குகின்றன. இதாலி, ஸிஸிலி, ஸார்டீனியா, பாண்டெலேரியாவிலுள்ள இதாலிய விமான தளங்கள், துறைமுகங்கள் இருப்புப்பாதைகள், மற்ற ராணுவ லக்ஷியங்களெல்லாம் நமது குண்டு வீச்சுக்கு இலக்காகுகின்றன. மேமீ 20-ம்வ யன்று 113 அச்சு விமானங்கள் நாசமாகிவிட்டன. மேமீ 20-ம் தேதிமுதல் 24 தேதிக்குள்ளாக அச்சு நாடுகளுக்கு 300 விமானங்கள், நஷ்டமாயின. நமக்கு 16 விமானம் நஷ்டம். நேசநாட்டு ஒரு விமான நஷ்டத்துக்கு அச்சுநாடுகளுக்கு 20 விமான நஷ்டம் ஏற்படுகிறது. இதுதான் நஷ்டக்கணக்கு விபரம்.

ஜெர்மன் விமானப்படையும், ரெகியா விமானப்படையும் மத்தியதரைக்கடல் ஆகாயத்திலிருந்தும் தீவுகளிலிருந்தும் துரத்தியடிக்கப்படுகின்றன. ஆகிலும் நேசநாடுகளின் விமானத் தாக்குதல் உச்சிநிலையை அடையவில்லை. ஆகிலும் தாக்குதல்களின் விளைவுகள் அதிகமானவை. ஒரு வாரமாக நேசதேச விமானங்கள் வெடிகுண்டுகளை வர்ஷித்தபிறகு, ஸிஸிலியிலுள்ள துறைமுகங்களையும் தளங்களையும், விமான தளங்களையும் முற்றிலும் அழிவுபடாமல் காப்பாற்ற அச்சுவிமானப்படை பகீரதப்பிரயத்தனம் செய்து வருகிறது. அச்சு நாடுகளின் முயற்சிகளை லக்ஷியம் செய்யாமல் பகலில் அமெரிக்க பறக்கும் கோட்டை விமானங்களும், இரவில் பிரிடிஷ் வெல்லிங்டன் விமானங்களும் அங்கு சென்று குண்டுகளைப் போடுகின்றன. இவ்விதமாக இரவு பகலாக மத்தியதரைக்கடலில் ஏற்படும் விமானத்தாக்குதலின் மூலம் இதாலி பூராவும் நடுநடுங்கி விடும்.

"ஜெர்மனியிலோ, இதாலியிலோ, ஆக்கிரமிப்பு நாடுகளிலோ, ஜெர்மனியின் யுத்தத் தொழிற்சாலைகளை நடத்துவதை நடைபெருமல் செய்வது தான் நம் இரு தேசங்களின் ஒன்று

பட்ட திட்டமென்று" மிஸ்ட்டர் சர்ச்சில் வாஷிங்டனில் சொன்னார். ஐரோப்பாவில் ஜெர்மனியின் பேரில் நடைபெற்ற இந்த திட்டமானது மத்தியதரைக்கடலுக்கும் இப்பொழுது பரவியிருக்கிறது. மகத்தான வெடிகுண்டுத் தாக்குதலின் விளைவுகளை இப்பொழுது தான் அச்சுநாடுகள் அறிந்து கொள்ளுகிறார்கள்.

---

## பிரிடிஷ் வெடி விமானப்படையின் புதிய தந்திரம்.

இவ்வருஷம் எஸ்ஸனை பிரிடிஷ் விமானப்படை 7-வது தடவையும், யுத்த ஆரம்ப முதல் 56-வது தடவையும் தாக்கியது. ஜெர்மனியில் மற்ற லக்ஷியங்களைத் தாக்கியதைவிட இது வேறுபட்டது. தாக்குதல் அலைகள் வருவது போல் பத்துத்தடவை பலமாகச் செய்யப்பட்டது இதிலிருந்து விமானப்படை சீப் மார்ஷல் ஸர் ஆர்தர் ஹாரிஸ் என்பவர் ஒரு புதிய தந்திரத்தைக் கையாளுகிறாரென்று தோன்றுகிறது.

இரண்டு வருஷங்களுக்கு முன்னால் ஒரு லக்ஷியத்தைத் தாக்க சில வெடி விமானங்கள் 7-மணிகளுக்கொருதரம் அனுப்பப்பட்டன. இதன் விளைவு யாதெனில் ஜனங்கள் இரவு பூராவும் விமானப் பாதுகாப்பு ஒளிகளில் பதுங்கியிருக்கவேண்டியதுதான். ஆகிலும் வெடி குண்டுகள் சாவகாசமாகப் போடப்படுவதிலிருந்து தற்காப்பு வேலையிலீடுபட்டவர்கள் சுலபமாகத் தங்கள் அலுவல்களை நடத்த சௌகரியமேற்பட்டது.

ஒரு வருஷத்துக்கு முன் அதிக கனமான குண்டுகளேற்றிச் செல்லும் விமானங்கள் கட்டப்பட்ட பொழுது, பலமாக ஒன்றுபட்டு தாக்கும் முறை கையாளப்பட்டது. ஒவ்வொரு நிமிஷத்திலும் 5 முதல் 15 டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகள் போடப்பட்டன. விமானப்படையெடுப்பு ஒரு மணிக்குள்ளாகவே முடிவடைந்துவிடும். சமீபகாலத்தில் இந்த முறை உன்னதியை அடைந்துவிட்டது. முக்கால் மணிநேரம் வரை ஒரு நிமிஷத்திற்கு 30 டன்கள் எடைமானமுள்ள வெடி குண்டுகள் லக்ஷியத்தின் பேரில் வர்ஷிக்கப்படுகின்றன.

இப்பொழுது வெடி குண்டு விமானப்படைத் தலைவர் இரண்டு முறைகளையும், அதாவது நெடுநேரம், ஒன்றுபட்ட தாக்குதல், உபயோகப்படுத்த உத்தேசித்திருக்கிறார். ஒன்றுபட்டும் பலமாகத் தாக்குவதுதன் மூலம் தற்காப்புகளை அழித்துவிடவேண்டும். நெடுநேரம் குண்டுமாறி பொழிவதிலிருந்து ஜெர்மானியர்களை சுரங்கங்களில் தூக்கமில்லாமல் விழித்திருக்கும்படி செய்துவிடவேண்டும். ஒரு மணியில் 2,000 டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகளைப் போடுவதிலிருந்து ஏற்படும் விளைவுகளை ஆறு நிமிஷத்தில் 200 டன் எடைமானமுள்ள குண்டுகளைப் போடுவதிலிருந்தும் அடைந்து விடலாம். அரை மணிக்கொருதரம் 200 டன் எடைமானமுள்ள குண்டுகளைப் போடுவதிலிருந்து ஜெர்மானியர்களை ஐந்து மணி நேரம் தூக்கமில்லாமல் செய்துவிடுவதோடு அவர்களுடைய தற்காப்புகளையும் நாம் அழித்துவிடலாம். இந்த மாதிரி அவகாசம் ஏற்படுத்துவதன் மூலம் தீ பலமாகப் பிடித்துக்கொள்ள சாதகம் ஏற்படுவதுடன் அடுத்தபடி போடப்படும் குண்டுகளின் உபயோகத்தையும் விருத்தி செய்ய ஹேதுவாகும்.

---

## யூ படகுகளின் வேட்டை.

### அட்லாண்டிக்கில் தற்காப்பற்ற வெளி மூடப்பட்டது.

அட்லாண்டிக்கில் பாதுகாப்பில்லாத வெளியே அற்றுவிட்டது என்று கப்பற் படை அதிகாரிகள் கூறுகிறார்கள். இந்த வெளி தற்சமயம் யூ படகுகளின் புதைகுழியாக மாறி விட்டது.

யூ படகுகள் கூட்டமாகச் செல்லுவது என்ற முறையானது அவர்களுக்கே பாதகமாக முடிந்துவிட்டது. ஒரு யூ படகு இருக்குமிடத்தைக்கண்டுபிடித்து விட்டால் அநேகம் யூ படகுகளை வேட்டையாடிவிட உளவு கிடைத்துவிடும்.

துணைக்காவல் படையின் நிகழ்ச்சிகளை இறுதியில் ஆராய்ச்சி செய்யும் பொழுது இந்த மே மாதத்தில் யூ படகுகள் ஏராளமாக நாசமடைந்தன என்பது வெளியாகும்.

ஒரு துணைக்காவல் கப்பல் கூட்டம் சென்றபொழுது அதன் எதிர்ப்பினின்றும், கடலில் எதிரியின் சிதைபட்ட நீர்மூழ்கிகளின் துணுக்குகள் ஏராளமாக சிதறி மிதந்தன.

இப்பொழுது அமெரிக்காவிலிருந்து பிரிடன் வரையிலுள்ள அட்லாண்டிக் சமுத்திரத்தின் ஒவ்வொரு மைலிலும் விமானத் தற்காப்பு ஏற்பட்டிருக்கிறது. தற்காப்பில்லாத வெளியில் இப்பொழுது ஸீபையர்ஸ், ஸ்வோர்ட்பிஷ் விமானங்கள் கொண்ட சிறிய விமானம் தாங்கி கப்பல்கள் சஞ்சரிக்கின்றன. இந்த விமானங்கள் மேற்சொல்லிய வெளியைப் பாதுகாக்கின்றன. இந்த வெளியைக் கடற்கரையிலுள்ள விமானப்படை வெகுதூரம் சென்று தற்காப்பு செய்ய முடியாமலிருந்தது.

காலக்கிரமத்தில் யூ படகுகள் குறுகிய பிரதேசத்தில் ஒதுக்கப்பட்டு சஞ்சரிக்கின்றன. அவைகள் முன்னேறித்தாக்குவதற்கு பதிலாக அவைகள் நம்மால் இப்பொழுது வேட்டையாடப்படுகின்றன. (டெயிலி ஸ்கெச்).

---

# ஜெர்மனி சாமான் கப்பல்களைக் கட்ட ஆரம்பித்திருக்கிறது.

## இந்த ஏற்பாட்டின் முக்யத்வம்.

அதிக வேலை செய்துவந்த தொழிற்சாலைகளெல்லாம் இப்பொழுது சாமான் கப்பல்களைக் கட்டும் வேலையில் ஜெர்மானியரால் தூண்டப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி ஒரு திட்டமும் இல்லாமலே யுத்தம் ஆரம்பித்த ஒரு நாடு இப்பொழுது இந்தத் திட்டத்தைக் கடைப்பிடித்திருக்கிறதென்பது கவனுர்கமுள்ளதென்று டெயிலி மெயில் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

ஜெர்மனியின் வெற்றிகள் மூலம் நார்வேயிலிருந்தும், டென்மார்க்கிலிருந்தும், ஹாலந்திலிருந்தும், பிரான்ஸிலிருந்தும், மத்தியதரைக்கடலிலுள்ள தேசங்களிடமிருந்தும் ஏராளமான கப்பல்கள் ஜெர்மனிக்குக் கிடைத்தன. யுத்தம் முடியும் வரையில் அவைகளையே சாமான்கள் கொண்டுபோவதற்கு உபயோகிக்கலாமென்றும் அவைகளுக்குப் பர்த்தியாக வேறு கப்பல்களைக் கட்டவேண்டியது அவசியமில்லையென்றும் ஜெர்மனி நினைத்தது.

இந்த மதிப்பும் தவருகி விட்டது. இதற்கு இரு காரணங்கள். நமது கடற்படை, சுரங்கவெடி பாவும் கப்பல்கள், கடற்படை தற்காப்பு விமானப்படை, கடற்கரையோரங்களில் நடமாடும் நமது லேசான கடற்படை, இவைகளின் சிறந்த நடவடிக்கையால் ஜெர்மனிக்கு ஏராளமான கப்பல் நஷ்டம் ஏற்பட்டது. இதேசமயத்தில் பழுது பார்க்கப்படுவதைவிட அதிகமாக உள்நாட்டு இருப்புப்பாதைப் போக்குவரத்து மார்க்கங்கள் சீர்கெட்டுவிடுவதிலிருந்து, ஜெர்மனி மதித்ததைவிட அதிகமான கடற்படை அதற்குத் தேவையாக இருக்கிறது.

பிரிடிஷ் விமானப்படையின் தாக்குதலினின்றும் அழிவுற்ற ரயில்வே எஞ்ஜின்களுக்குப் பதிலாக புதிய எஞ்ஜின்களைத் தயார் செய்வதற்காக யூ படகுகளைக் கட்டும் வேலை குறைக்கப்பட்டுவிட்டனவென்பதை நாம் கேள்வியுற்ருேம். பால்டிக் கடலில் நடமாடுவதற்கு லாயக்குள்ள சாமான் கப்பல்களைக் கட்டுவதற்குத் தேவையான தளவாடங்கள், தாதுப் பொருள்கள், இயந்திரங்களைச் சேகரிப்பதற்காக யூ படகுகளைக் கட்டும் வேலை இன்னும் குறைவுபடலாம்.

பால்டிக் கடல் என்று இப்பொழுது சொல்லுவது பொருத்தமில்லை. பால்டிக் கடலில் முக்கிய துறைமுகமான ஸ்டெட்டின் என்பது இனிமேல் வியாபாரத்துக்கு உபயோகப்படாது. பால்டிக் கடல் வழியாக நடைபெற்ற இரும்பு வியாபாரம் கீல் கால்வாய் வழியாக வந்து வடக்குக் கடலுக்குக் கொண்டுபோகப்படுகிறது. கப்பல்கள் ஹாலந்து கடற்கரை ஓரமாக மெதுவாகச் சென்று, கூடியவரையில் நம்முடைய வேவுபார்க்கும் விமானங்களையும் ஏமாற்றிவிட்டு ரைன் நதி முகத்துவாரத்துக்குச் செல்லுகின்றன.

சாமான்கள் ரைன் நதிக் கரையிலுள்ள சிறிய படகுகளில் ஏற்றப்பட்டு, அக்னி பாதையும், வெள்ளப் பெருக்கும் உள்ள பிரதேசங்களைத் தாண்டி டூயிஸ்பர்க்குக்கும் டார்ட்மண்டுக்கும் செல்லுகின்றன. தரை மார்க்கமாக சாமான்களைக் கொண்டுபோவதில் ஏற்படும் சிரமங்களைவிட இந்தச் சிரமங்கள் சுலபமானவையென்று ஜெர்மனி கருதுகிறது.

# வாஷிங்டனில் மிஸ்ட்டர் சர்ச்சில் பத்திராதிபர்களுடன் செய்த சம்பாஷணை.

## பிரதம மந்திரி அதிக உல்லாசத்துடனிருந்தார்.

லண்டன், மே 26.

பத்திராதிபர்களுடன் மிஸ்ட்டர் சர்ச்சில் சம்பாஷணை செய்ததைப் பற்றி டெயிலி மெயில் பத்திரிகையின் வாஷிங்டன் நிருபர் பின்வருமாறு எழுதுகிறார் :—

"மிஸ்ட்டர் சர்ச்சில் ஒன்றையும் ஒளித்துச் சொல்லவில்லை. அவர் வாயிலிருந்து வார்த்தைகள் லாகவத்துடன் வெளிவந்தன. வாயில் சுருட்டு வைத்திருந்தபோதிலும் அவைகள் சரளமாகப் பேசப்பட்டன. அவர் கைக்குறிப்பு ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லை. அயல் நாட்டுத் தூதரையும், தன்னுடைய காரியதரிசியையும் ஒன்றும் கேட்டுத் தெரிந்துகொள்ளவுமில்லை. என் பக்கத்திலிருந்த கனேடியர் "அவர் ஆணித்தரமாகப் பேசுகிறார்" என்று சொன்னார். அவர் அதிக உல்லாசத்துடனிருந்தார். அநேகவிதமாக விளையாட்டுப் பேச்சுகளிலும் ஈடுபட்டார். அவருடைய பதவினியாசங்கள் நேர்த்தியாகவும் அர்த்த புஷ்டியுள்ளதாகவுமிருந்தன. என்னால் குறைகூறவும் முடியவில்லை. உண்மையறியவும் முடியவில்லை. பூரா சம்பாஷணையையும் அவர் நடத்தினார். நாங்கள் மயங்கினவர்கள்போல் சும்மா இருந்தோம்.

அவர் பேச்சு வன்மை அழகாயிருந்தது. கர்வி என்று அவரைச் சொல்லவே முடியாது. அவர் எங்களிடமாவது எங்களைக் குறித்தாவது பேசவில்லை. ஒரு வாலிப நிருபர் அபத்தமான ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு, வெட்கப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது பிரதம மந்திரி அவனுடைய நிலையைக் கண்டு, உத்சாகப்படுத்தக்கூடிய ஒரு மறுமொழியை விடுத்து அவனைச் சந்தோஷப்படுத்துவார். அவர் எங்களை விருந்துக்கு அழைத்திருந்தால்கூட இவ்வளவு குதூகலமாகயிருந்திருக்கமாட்டார்.

என்னுடைய கேள்விக்கு அவர் விரிவான பதிலுரைத்தார். பிரதம மந்திரியின் வெளிப்படையான பேச்சைக் கேட்டு ஹாலிபாக்ஸ் பிரபு சிறிது பதைத்தார். அவருடைய காரியதரிசி கடியாரத்தைக் கவலையுடன் கவனித்தார். மிஸ்ட்டர் சர்ச்சில் கலக்கமடையாமல் பேசினார். ஒவ்வொரு யுத்த அரங்கத்தைப் பற்றியும் கேள்விகள் விடுத்தபொழுது கண்டம் கண்டமாகவும் சமுத்திரம் சமுத்திரமாகவும் விவரித்து அவர் பேசினார்.

---

# இரண்டாம் போர்முனை பிரச்னைகள்.

## (லிபரேடர்).

யுத்தத்தின் மகத்தான தந்திரத்தைப்பற்றி அச்சுநாட்டார்கள் புதுமாதிரியான வியாக்யானம் எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். விசேஷமாக ஸ்வீடிஷ், ரைட்விங்கு பத்திரிகைகளுக்கு ரோமிலிருந்து வரும் வர்த்தமானங்களிலும் ரோமுக்கு ரிப்பன்டிராப் விஜயம் செய்ததைப்பற்றி ஜெர்மானியர் எழுதும் வியாக்யானங்களிலும் இவை வெளிவந்திருக்கின்றன.

"ஐரோப்பிய மக்கள் அறிந்திருந்தாலும் சரி, அறியாவிட்டாலும் சரி, ஐரோப்பாவின் க்ஷேமம் நிலைபெறவேண்டுமானால் ஜெர்மனியும், இதாலியும் க்ஷேமமாகயிருக்கவேண்டும்" என்று வியாக்யானம் எழுதப்பட்டிருக்கிறது. நடுநிலைமை வகிக்கும் பிறபோக்கு நாடுகளின் நிருபர்களும் உத்சாகத்துடன் இதேவிதமாக எழுதியிருக்கிறார்கள். ரோமிலிருக்கும் அதிகாரிகள் வட்டாரத்தின் மனோநிலையை அறிவதற்கு வாடிகனுக்கு மோஸயர் ஸ்பெல்மான் விஜயம் செய்ததே அத்தாக்ஷியாகும். ருஷ்ய வெற்றிகளிலிருந்து தாத்காலிகமாக நேச நாடுகளுக்கும், அச்சு நாடுகளுக்கும் ஒன்றுபட்ட அக்கரை உண்டாகியிருக்கலாம். இந்த அல்பமான ஒற்றுமையிலிருந்து அச்சு நாடுகள் சமாதானத்தைக் கோருகின்றன என்று பொருள்படாதபோதிலும் நிலைமையை நேசநாடுகள் பரிசீலனைசெய்து ஐரோப்பாவில் இரண்டாம்போர்முனையை ஏற்படுத்தாமலிருந்தது சிறந்த காரியம்.

இதிலிருந்து போல்ஷிவிஸத்தை எதிர்ப்பதற்கு நேசநாடுகளும் ஒத்தாசை செய்ய வேண்டுமென்று அச்சுநாடுகள் அழைப்பதுபோலிருக்கிறது. இதற்குப் பதில் கஸாப்ளாங்காவில் ஸ்பஷ்டமாகவும் நிபந்தனையன்னியிலும் அளிக்கப்பட்டது. இதைப்பற்றி நாம் அடிக்கடி சொல்லமுடியாது. வெளிப்படையாகயில்லாதபோனாலும், ஐரோப்பாவில் இரண்டாம் போர்முனை ஏற்படுத்துவதென்று அந்தரங்கமாக முடிவுசெய்யப்பட்டது. இதற்கு ஒன்பது மாதங்கள் கால அளவு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகிலும் ஐரோப்பாவைப் படையெடுப்பது வஸந்தத்திலோ, வேனிர்காலத்திலோதான் நடைப்பெறக்கூடும். ஆகையால் கால அளவு ஆறுமாதங்களுக்குக் குறைந்துவிடும்.

## கால தாமதத்துக்குப் போர்.

வரப்போகும் ஆறுமாதங்கள் நமக்கு மிகவும் சங்கடமான காலமாயிருக்கும். அச்சு வல்லரசுகள் இதை அறிவார்கள். அவர்களிடமுள்ள சாதனங்களை உபயோகித்து யுத்தப் போக்கை ஒத்திவைக்க அவர்கள் முயலுகிறார்கள். எவ்வித தியாகத்தையும் செய்ய அவர்கள் தயாராகயிருக்கிறார்கள். இந்த முயற்சியில் ஜெர்மன் 6-ம் படை ஈடுபட்டது. ஆகிலும் மற்ற அரங்கங்களில் சண்டை செய்கிறவர்களுக்கு இது சொல்ப அவகாசத்தைத்தான் அளித்தது. ஆபிரிக்காவில் நேசதேசப்படைகளைத் தேக்கிவிடவேண்டுமென்று ரோமலும், வான் ஆர்ணிமும் செய்த பிரயத்னம் வீணாகிவிட்டது.

நேசதேசத்தாரின் படைத்திரட்டுவேலையைக் குறைப்பதற்காக யூ படகுகளும் முயற்சிக்கின்றன. அவைகள் நமது கப்பல்களை மூழ்கடிக்கின்றன. யுத்த முனைக்கு முஸ்தீப்புகள் அனுப்புவது தாமதப்படுகிறது. ஆனால், அவைகளும் ஆக்கிரமிப்பு பிரெஞ்சு தேசமும் நமது வெடிகுண்டுகளின் தாக்குதல்களுக்குட்படுகின்றன. இந்த குண்டுகள் ஜெர்மன் தொழிற்சாலைகளையும், போக்குவரவு மார்க்கங்களையும் தகர்ப்பதற்குப் பதிலாக யூ படகுகளைத் தாக்குகின்றன. டங்கர்க் நிகழ்ச்சிக்குப்பின் செய்ததுபோல், நாம் காலப்போக்கை எதிர்பார்க்கிறோம். நமக்கு உத்தம பக்ஷமாக ஆறுமாதகாலமிருக்கிறது. இதே சமயத்தில் அச்சு நாடுகள் காலஹரணம் செய்ய முயற்சிக்கிறார்கள். இந்த ஏற்பாடு ராஜ தந்திரிகள் மூலம் நடைபெறுகிறது.

## பிளவுபட்ட அதிகாரம்.

ராணுவம் சம்பந்தப்பட்டமட்டில் குறிப்பிட்ட கால அளவிற்குள் நடவடிக்கை எடுக்க நாம் தீர்மானித்துவிட்டோம். டுனிஸியா போரின் போக்கு நமக்குத் திருப்திகரமாகயில்லாத போனாலும் கஸாப்ளாங்காவில் முடிவு செய்யப்பட்டதும், பெர்லின் ரோம் முதலிய தேசங்களின் கவலைக்கிடமாயிருப்பதுமான நடவடிக்கைகள் குறிப்பிட்ட தருணத்தில் பூர்த்தியடையுமென்றும் நினைக்கலாம்.

இந்தமட்டில் கஸாப்ளாங்கா மகாநாட்டில் முடிவு செய்யப்பட்ட நடவடிக்கைத் திட்டங்களைக்கண்டு நாம் திருப்தியடையலாம். நல்ல எண்ணமும் அவசரமான ஆவல்களுமிருந்தால் மட்டும் திட்டத்தை செய்கையில் நடத்தப்போதாது. இரண்டாம் போர்முனையை அமைப்பதற்கு வேண்டியது ராணுவமுறைகள்தான். இவ்விஷயத்திலும் வட ஆபிரிக்காவில் ஏற்பட்ட அனுபவத்திலிருந்து எல்லாப்படைகளையும் நிச்சயமாய்த் திருத்தியமைக்க வேண்டியதாகும். கால அளவு குறைச்சலாகயிருக்கிறது, திருத்தியமைப்பது பூர்ணமாக நடைபெற முடியாது. இதனால் அவசியமான திருத்தங்களையும் செய்யக்கூடாதென்று ஏற்படாது. நம்மிடமிருக்கும் குறைவுயாதெனில் அதிகாரவர்க்கத்தில் பிளவும் ஒவ்வொரு ப்டையும் தன்னந்தனியாக அமுல் நடத்துவதும்தான்.

மேலேசொல்லிய விஷயங்களை வட ஆபிரிக்காவிலுள்ள புதிய சேனாதிபதிகள்தான் கவனிக்கவேண்டும். அவர்கள் இலாகா சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள் செய்யும் சீர்திருத்தங்களுக்கு அரசாங்கம் ஆதரவளிக்கவேண்டும். நேசதேசத் தலைவர்கள் மகத்தான காரியங்களைச் செய்யக்கூடும். பிரிடன், அமெரிக்கா, இதர நேசநாடுகள் கொண்டதும், தங்கள் இலாகாவின் கொள்கைகளையோ, அமைப்பையோ, பொருட்படுத்தாததுமான ஸ்வதந்திரச் சேனை ஒன்றைத் தயாரிக்கலாம்.

கஸாப்ளாங்காவில் சர்ச்சை செய்யாததும் அத்தியாவசியமாகச் செய்யக்கூடியதுமான மற்றொரு அலுவலுமிருக்கிறது. ஸ்வதந்திரச்சேனை ஐரோப்பாவைப் படையெடுக்கும்பொழுது அவர்கள் நார்வேயிலிருந்து கிரீஸ் வரையிலுள்ள பிரதேசத்தில் எந்த இடத்திலும் இறங்கலாம். நாம் இறங்கியவுடன் பிரெஞ்சு தேசப் புரட்சிக்குப்பின் இப்பொழுது ஏராளமான ராஜீய வம்சங்கள் ஒன்றுசேர்ந்துவிடும். இவர்களை நாம் சரியானபடி உபயோகப்படுத்தவேண்டும்.

அவசியமான உதவிப்படையும், தொழிலாளர் கூட்டமும், முஸ்தீப்புகளுமில்லாமல் நமது படைகள் ஐரோப்பாவில் இறங்கினால், நமக்கு உதவி எங்கிருந்து கிடைக்கும். நார்வேயில் உதவி சுலபமாகக் கிடைத்துவிடும். மற்ற இடங்களில் இது நடைபெறாது. ஹாலந்திலும் பெல்ஜியத்திலும், பிரான்ஸிலும், நிர்வாகத்தை நாஸி குவிஸ்லிங்குகள் நடத்திவருகிறார்கள். இதாலியில் பாஸிஸ்டு பொதுஜன நிர்வாகம் ஆக்ஷிபுரிகிறது.

நாம் என்னசெய்யவேண்டும். வட ஆபிரிக்காவைப்போல உள்நாட்டு வியவகாரங்களில் தலையிடாமலும் யுத்த மத்தியில். பொதுஜன நிர்வாகத்தை கவனிக்கமாட்டோமென்றும் சொல்லி உள்நாட்டு ஜனங்களையே நிர்வாகம் வகிக்கும்படிக்கும் செய்துவிடப்போகிறோமா, அல்லது இங்கிலாந்திலிருக்கும் அயல்நாட்டு நிர்வாககளை நமது ராணுவ பலத்துடன் மறுபடியும் அதிகாரம் வகிக்கும்படி செய்வதா.

### அனுவசியமானவை.

பொருளாதார சங்கத்தில் பேசியபொழுது ஐக்கிய பத்தியமுள்ள நிர்வாகமிருக்கவேண்டு மென்று அவர் நம்புவதாக ஜெனரல் கிராட் வெளியிட்டார். அவருடைய சொற்பொழிவுக்கு இதுதான் பொருள், பிரான்ஸின் விடுதலைக்கு கிராட்டின் சேனைதான் முக்கியமானது என்று பிரான்ஸுக்கு அனுப்பப்படும் தகவல்களை ஒலிபரப்பு நிலயம் மறைத்து வருகிறது. ஆகையால் பிரான்ஸில் நேசநாடுகளிறங்கினால் யாருடைய உதவியை நாம் நாடுவது.

கட்சிமாறி வேலைசெய்கிறவர்களுள்ள இதாலியிலும் இந்தப் பிரச்னை உண்டாகுகிறது. யூகோஸ்லாவியாவிலும் கிரீஸிலும் இந்தச் சிரமம் அதிகரிக்கும். இவ்விடங்களில் ஸ்வயநலம் கருதும் அநேக ஸ்தாபனங்களிலிருப்பதுடன் ருஷ்யர்களின் ஒத்தாசைபெற்ற அநேக இயக்கங்களுமிருக்கின்றன.

இவைகளெல்லாம் அனுவசியம். ஐரோப்பாவின் அச்சுநாடுகளைப் போலவும் அச்சுநாடு களுடன் ஒத்துழைப்பவர்கள், அதிகாரத்துக்குட்பட்டவர்களைப் போலவும் நாம் கெட்ட எண்ணம் கொள்ளவில்லையென்றும் நாம் ஸ்பஷ்டமாகச் சொல்லவேண்டும். ஐரோப்பாவில் ஒற்றுமையில்லை. வலுவான பிளவுகளிருக்கின்றன. அச்சுநாடுகளுடன் ஒத்துழைக்காதவர் களுடன் நாம் பேரம் செய்யப்போகிறோம். வருங்காலத்தில் ஜனநாயக முறைகளைப்பற்றி பரிசுத்தமாக அந்தரங்கபக்தியுடையவர்களைத்தான் நாங்கள் ஆதரிப்போம்.

---

# ருஷ்யாவுக்கு ஏராளமான உதவி.

---

ருஷ்யாவுக்கு முக்கியமாக இரண்டு மார்க்கங்கள் வழியாக சாமான் ஸப்ளைகள் அனுப்பப் படுகின்றன. எதிரிகள் ஆக்கிரமித்திருக்கும் கடற்கரையை ஒட்டி அபாயத்துக்குட்பட்ட சமுத்திரமார்க்கமாகிய ஆர்ட்டிக் வழியாக மர்மான்ஸ்க்குக்குப்போகும் வழியொன்று. மற் றொன்று சமுத்திரத்தில் ஆயிரக்கணக்கான மைல்களைக்கடந்து பாரஸீக வளைகுடாவுக்குச் சென்று பிறகு தரைமார்க்கமாக மலைப்பிராந்தியங்களிலும் பாலைவனங்களிலும் சென்று ருஷ்யாவுக்குப் போவது மற்றொன்று.

வடக்கு சமுத்திரம் வழியாக 19 பெரிய துணைக்காவல் கொண்ட கப்பல்கூட்டம் சென்றி ருக்கிறது. ருஷ்யாவுக்கு ஆயிரக்கணக்கான டாங்கிகளையும் விமானங்களையும், அவைகள் கொண்டு போயின. ஒவ்வொரு துணைக்காவல் கப்பல் கூட்டமும் ஒரு பெரிய கப்பற் சண்டை செய்ததென்று நினைக்கலாம். "உலகத்திலேயே சிறந்த வியாபாரஸ்தலமாக மர்மான்ஸ்க் துறைமுகம் மாறிவிட்டது. ருஷ்யரின் எதிர்ப்புக்கு இந்தத் துறைமுகம் முக்கிய சாதகமென்று அறிந்து ஜெர்மானிய விமானங்கள் கூட்டம் கூட்டமாக இதைத் தாக்கு கின்றன.

அனுப்பப்பட்ட உதவியின் புள்ளி விபரங்கள் நாம் செய்திருக்கும் ஒத்தாசையை வெளிக்காட்டும். 1942-ம் வருஷம் ஜூலை மாதத்தில் பிரிடிஷ் உற்பத்தி இலாகா மந்திரி "சாமான் அனுப்புவதாக ருஷ்யாவுடன் பிரிடன் செய்துகொண்ட உடன்படிக்கையைப் பூர்த்தி செய்து விட்டதா" என்று பிரச்னை பண்ணினார். இதற்கு விடை "ஆம்" என்பதுதான். அப்பொழுது ஒரு வாரத்துக்கு 50 வீதம் பிரிடன் டாங்கிகளை அனுப்பி வந்தது. ஜூன் மாதத்துக்குள்ளாக அனுப்புவதாக ஒப்புக்கொண்டதை விட 11 சதவிகிதம் அதிகமான விமா னங்களை மே மாதத்தில் பிரிடன் அனுப்பியிருக்கிறது. பிரிடன் வாக்குறுதி செய்த 100 விமானங்களுக்கு 111 விமானங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

சென்ற பன்னிரண்டு மாதங்களில் பிரிடனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் 3,000 விமானங்களும், 4,000 டாங்கிகளும், 3,000 வண்டிகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன. பல வகைப்பட்ட சாமான்கள், யந்திர ஆயுதங்கள், உலோகங்கள் எல்லாம் சேர்ந்து 8,31,000 டன் கள் எடைமானம் உள்ளவைகளும ருஷ்யாவுக்குச் சென்றிருக்கின்றன. இதை விர 42,000 டன்கள் எடைமானமுள்ள விமான எண்ணெய்யும் 66,000 டன்கள் எடைமானமுள்ள நிலக் கரியும் சென்றிருக்கின்றன.

பிரிடன் அனுப்பியிருக்கும் பேருதவியை ருஷ்யர்கள் நன்கு மதித்திருக்கிறார்கள். 1941-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் மாஸ்கோவுக்குச் சமீபத்தில் ஜெர்மானியர்கள் வந்து நிலைமை மோசமாகயிருந்த பொழுது அமர்க்களத்துக்கு பிரிடிஷார் விமானங்களையும் டாங்கி களையும் அனுப்பினார்கள்.

ஜெர்மனியைத் தாக்கும் யுத்தத்தில் இது ஒரு முக்கியமான கட்டம். அடுத்த வசந்த காலத்தில் ஜெர்மானியர்கள் பின்வாங்கும்படி செய்யப்பட்ட பொழுது ருஷ்யாவின் சார்பாக லிட்வினாவ் வந்தனோபசாரம் தெரிவித்தார். "நமது செம்படைக்கு பிரிடன் அனுப்பியுள்ளதும் அனுப்பி வருவதுமான பேருதவிக்கு நாம் நன்றி செலுத்துகிறோம்" என்று சொன்னார்.

பிரிடன் உலகம் பூராவுக்கும் ஒத்தாசை அனுப்பவேண்டியிருக்கிறது. எதிரியை முறியடிப்பதற்குத் தேவையான முஸ்தீப்புகளை ருஷ்யாவுக்கு அனுப்பும் வேலையை பிரிடன் தைரியமாக ஏற்றுக்கொண்டது. யுத்தப்போக்கு நேசநாடுகளுக்குச் சாதகமாக மாறிவிட்டது. தைரியமூட்டும் இந்நற்செய்திக்கு ருஷ்யாவின் தீரமும், பிரிடிஷ் வேலைக்காரர்கள், பிரிடிஷ் கப்பல்களின் நடவடிக்கைகளும் தான் காரணமாகும். ருஷ்யர்கள் ஸ்டாலின்கிராட் யுத்தத்தில் வெற்றிபெற்றார்கள். பிரிடன் துணைக்காவல் கப்பல் கூட்டத்தின் வெற்றியைப் பெற்றுவிட்டது.

---

144704

## கடற்படையின் யுத்த அவசியங்கள்.

### கப்பல் உபயோகத்தை நிர்த்தராணம் செய்யவேண்டும்.

(டைம்ஸ் பத்திரிகை.)

கடற்படை வசதிகளைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளவேண்டிய முறைகளைப்பற்றி நமது கடற்படை நிருபர் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார்.

இந்த அமுலானது பொதுஜன சேவகர்களாலும் லெதர்ஸ் பிரபுவின் தலைமையிலுள்ள யுத்தப் போக்குவரவு இலாகாவுடன் ஒத்துழைக்கும் அனுபவம் வாய்ந்த மாலுமிகளாலும் நடத்தப்படுகிறது. இவர்கள் அடிக்கடி திட்டம் போடுகிறார்கள். இவர்களுடைய திட்டங்களுக்கு எதிரியின் செய்கைகளிலிருந்தும், நேசநாடுகளின் அவசியமான நடவடிக்கைகளிலிருந்தும், சீர்கேடுவந்துவிடும். இதற்குச் சிறந்த உதாரணமாக வட ஆபிரிக்க யுத்த முயற்சிகளைச் சொல்லலாம்.

சமாதான காலத்தைப்போல் கப்பல்களின் பாகுபாடுகளை யுத்தகாலத்தில் கவனிக்க முடியாது. இன்று சாமான் கொண்டுபோகும் கப்பல் பெரிய வியாபாரக் கப்பலாக மாறிவிடலாம். அதற்குப் போதிய வேகமும் பலவகைப்பட்ட சிறிய சாமான் மூட்டைகளைக் கொண்டுபோவதற்கு அரைகளும் இல்லாமலிருக்கலாம். சாதாரணமாக அதில் தானியமும் நிலக்கரியும் ஏராளமாகக் கொண்டுபோவது. பிரிடிஷ் பெரிய வியாபாரக்கப்பல்களெல்லாம் வேறு உபயோகத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குப் பதிலாக நேசதேசக் கப்பல்களும் சிறிய சாமான் கப்பல்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

#### ஐச்வர்யங்களைத் திரட்டுதல்.

கடற்படையைத் திரட்டும் வேலையில் பிரிடனும் அமெரிக்காவும் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றனர். ஒரு நிகழ்ச்சிக்குத் தேவையான கப்பல்களை ஒரு தேசம் அனுப்ப இயலாவிட்டால் மற்றொரு தேசம் தன்னுடைய கப்பல்களை அனுப்பி உதவியளிக்கும். இது மாதிரியான ஏற்பாடுகளை லண்டனிலும், வாஷிங்டனிலுமிருக்கும் ஒன்றுபட்ட கடற்படை சரிக்கட்டும் சங்கமானது நிறைவேற்றிவருகிறது. இதை வின, ஒன்றுப்பட்ட உற்பத்தி, ஐச்வர்யம் சேமிப்பு சங்கமானது இரண்டு நாடுகளின் உற்பத்திகளை நிர்த்தாரணம் செய்து அதன் மூலம் கப்பற்படையைக் கூடுமானவரையில் சிக்கனமுறையில் உபயோகிப்பதையும் அவர்கள் கவனித்துவருகிறார்கள்.

இதற்கு உதாரணமாக, ஏராளமான கனவடிவு உள்ளதும் தெற்குத் துறைமுகங்களிலிருந்து கனிவர்க்கங்களைக் கொண்டுவருவதற்கும் கட்டப்பட்ட பிரிடிஷ், நார்விஜியன் கப்பல்களை வேறு அலுவல்களுக்கு உபயோகப்படுத்தியதைச் சொல்லலாம். யுத்தத்தில்

பளுவான சாமான்களையும் லேசானதும் அல்லது பருமனுமுள்ள சாமான்களையும் ஏற்றிச் செல்ல இவைகள் உபயோகப்பட்டன. இந்தச் சிறிய கப்பல்களெல்லாம் கடுமையான சீதோஷ்ண ஸ்திதியையும் தாங்கியிருக்கின்றன.

கப்பல்களை சிக்கன முறையில் உபயோகிக்கவேண்டிய அவசியத்திலிருந்து . பிரயாணத்தின் ஒரு பகுதியில் ஒரு அலுவலையும் மற்றொரு பகுதியில் மற்றொரு அலுவலையும் ஒரு கப்பல் செய்யவேண்டியிருக்கிறது. வட அமெரிக்காவிலிருந்து விமானங்களையும், வண்டிகளையும், ஆபிரிக்காவுக்கு எட்டாம் படைக்கு ஒரு கப்பல்கொண்டுபோகலாம். இங்கிலாந்துக்கு அங்கிருந்து எண்ணெய்வித்துகளையும், செம்பையும், இரும்புக் கட்டிகளையும் எடுத்துச்செல்லும். மத்தியக் கிழக்குத் துருப்புகளையும், ராணுவ முஸ்தீப்புகளையும் ஏற்றிச்சென்ற கப்பலில் திரும்பிவரும்பொழுது சீதகாரியந்திரத்தில் வைக்கப்பட்ட கசாய் கொண்டுவரப்பட்டது. குறிப்பிட்ட முறைகளில் இவைகளை நடத்துவதென்பது சாத்தியமான காரியமில்லை.

### அதிக வேலைசெய்யும் கப்பல்கள்.

கைவசமுள்ள கப்பல்களை உபயோகமுள்ள வகையில் பிரயோஜனப்படுத்துவதென்றால் உலகம் பூராவும் கப்பல்களுக்கு எண்ணெய், கரி முதலியவை சீக்கிரமாக நிரப்புவதற்கு வசதிகளும், துறைமுகத்தில் சாமான்களை இறக்குவதற்கும் ஏற்றுவதற்கும் வசதிகளும், உபயோகமற்ற கெட்டுப்போன சாமான்களைக் காப்பாற்றுவதற்கும், பழுதுபட்டவைகளைச் சீர்படுத்துவதற்கும் வசதிகளும் ஏற்பாடாகவேண்டும். கப்பல்களைத் துறைமுகத்தில் கூடிய சீக்கிரத்தில் திரும்பிவிடுவதும் அவசியமாகும். இதுதான் மந்திரி இலாகாவின் முக்கியமான வேலை. கப்பற்படை அமுல் நடத்தும் சபையானது இந்த வேலையில் கவனம் செலுத்தி வருகிறது. கப்பல்கள் ஏராளமான அலுவல்களைச் செய்துவருகின்றன. துறைமுகங்களில் கப்பல்கள் சாவகாசமாகத் தங்கி அதன் யந்திரங்களை மெதுவாகப் பழுதுபார்ப்பது என்ற காலம் போய்விட்டது. யுத்த அவசியத்தினால் கப்பல்களுக்கு அதிக சிரமமேற்பட்டிருக்கிறது. கப்பலின் பத்திரத்துக்குவேண்டிய ரிபேர்கள்தான் செய்யப்படுகின்றன. மற்ற வேலைகள் ஒதுக்கிவைக்கப்படுகின்றன.

யுத்தம் முடிவடையும்பொழுது பிரயாணிகள் அநேக அழகான கப்பல்களைக் காண்பது அரிது. பாக்கியிருக்கும் கப்பல்களும் பழுதுபட்டிருக்கும். கனமான டாங்குகளையும் சிறிய துறைமுகங்களில் அவைகளை இறக்கும் முஸ்தீப்புகளையும் ஏற்றிச் செல்லுவதும் கப்பலின் அமைப்பைப் பாதிக்கும். கப்பல்களிலிருந்து அகற்றப்பட்ட பிரயாண வசதிகள் மறுபடியும் அமைக்கப்படவேண்டும். எஞ்சின்களுக்கும் விரிவான பழுதுகள் பார்க்கவேண்டும். தேய்ந்துபோன பாகங்களைப் புதுபிக்கவேண்டும். விசேஷமான வியாபாரங்களுக்காகத் திட்டம் போடப்பட்ட கப்பல்களுக்குப் பதிலாக யுத்த சேவைக்கு லாயக்குள்ள சிறிய கப்பல்கள் கட்டப்பட்டுவிட்டன. சீக்கிரமாகக் கப்பல் கட்டும் அவசியமும் உண்டாகியிருக்கிறது. யுத்தத்துக்குப் பின் பாக்கியிருக்கும் சாமான் கப்பற்படையானது யுத்தம் ஆரம்பித்தபொழுது இருந்ததைவிட அதிக வித்தியாசமுள்ளதாகயிருக்கும்.

---

# ஜப்பானின் கொள்ளை.

## தூரக்கிழக்கில் கிரமமாகப் பறிமுதல் நடைபெறுகிறது.

(சைனாவிலிருக்கும் நிருபர் எழுதுகிறார்).

எதிரிகள் ஆக்கிரமித்திருக்கும் அல்லது எதிரிகளின் அமுலுக்குட்பட்டிருக்கும் நாடுகளில் எதிரிகள் கொள்ளையடிக்கும் விஷயமாக நேசதேசத்தார்கள் விடுத்திருக்கும் அறிக்கையை ஒட்டி வியாக்யானிகளெல்லாம் ஐரோப்பிய அட்டூழியங்களைப்பற்றி மட்டும் எழுதுகிறார்களென்பது சகஜம்தான். ஆகிலும், உலகத்தின் மற்றொரு பாகமாகிய தூரக்கிழக்கில் 10 வருஷங்களாக நடைபெற்றுவரும் மற்றொரு வல்லரசின் அக்கிரமங்களைப் பற்றியும் நாம் விவரிக்கவேண்டியதுதான்.

1931-ம் வருஷம் மஞ்சூரியாவைப் படையெடுத்தது முதல் ஜப்பானியச் சேனை அதைக் கொள்ளையிட்டு வருகிறது. இதர வல்லரசுகளின் அக்கரைகளைக் குறைப்பதற்கும், தொழில், வியாபார முறைகளில் முக்கியமானவைகளை ஒருவரே குத்தகை எடுத்துக்கொள்ளுவதற்கும் ஏற்படும் ஆக்ஷேபனைகளுக்குப் பதிலாக இவைகள் ஸ்வதந்திரமுள்ள மஞ்சுகோ அரசாங்கத்தின் நடவடிக்கைகளென்றும் அதற்கு ஜப்பான் ஜவாப்தாரியல்லவென்றும் ஜப்பான் புகல் சொல்லிவந்தது.

## ஏக போகம்.

இந்த ஏகபோக முறை 1935-ம் வருஷத்தில் பலமடைந்தது. பெட்ரோல் எண்ணெயும் ஒருவர் குத்தகைக்குட்பட்டது. இதிலிருந்து அமெரிக்கா பிரிடிஷ் எண்ணெய் கம்பெனிகளின் தொழில்கள் நின்றுபோய்விட்டன. இந்தக் குத்தகைத் திட்டம் உப்பு, தீக்குச்சி உற்பத்தி, விவசாயப் பொருள்கள அயின் வியாபாரம், இன்ஷ்யூரன்ஸ் அபிவிருத்தி, ஏற்றுமதி இறக்குமதித் தொழில்களுக்கு பரவிற்று. எல்லாப் போக்குவரத்துகளையும் ஜப்பானிய முதலாளிகள் கைவசப்படுத்திக்கொண்டு ஸ்வப்ரயோஜனம் செய்து வந்தார்கள். அயல்நாட்டு பாங்குகள் நாணயம், பண்டம் மாற்றுதல் இவைகளில் ஏற்பட்ட சட்டதிட்டங்களால் பாதிக்கப்பட்டு அழிவுற்றன. மஞ்சூரியாவிலுள்ள தாதுப் பொருள்களையெல்லாம் ஜப்பானியர்கள் கொள்ளையிட்டார்கள்.

1937-ம் வருஷம் சீன யுத்தம் ஆரம்பமான பொழுது அங்கும் ஜப்பான் கொள்ளையடிக்க ஆரம்பித்தது. லண்டனைக் கொள்ளையிடவேண்டுமென்று ப்ளுசர் நினைத்ததுபோல் அழகான நகரமான ஷாங்கேயைக் கொள்ளையிடவேண்டுமென்று 1937-ம் வருஷம் முதல் ஜப்பானியர்கள் எண்ணமும் கொண்டார்கள். ஜப்பானியர் வசமுள்ள சூசௌ வாய்க்காலுக்கு வடக்கேயுள்ள அயல்நாட்டு விடுதிகளின் ஒருபகுதியுள்பட ஷாங்கே பூராவிலுள்ள அழகிய வஸ்துக்களையெல்லாம் ஜப்பானியர் பறிமுதல் செய்தார்கள். சீனர்கள் வசமுள்ள தொழிற்சாலைகளை ஜப்பானியச் சேனைக் கைப்பற்றிவிட்டது. தொழில்களையும் நடத்திவந்தது. கைவசப்படுத்தப்படாத பிரிடிஷ், அமெரிக்கத் தொழிற்சாலைகளிலிருந்து உபயோகமுள்ள யந்திர சாதனங்கள் அப்புறப்படுத்தப்பட்டதுடன், தாதுப்பொருள்கள் ஸப்ளையிலும் உற்பத்திசெய்யப்படும் சாமான்களை அப்புறப்படுத்துவதிலும் ஏற்பட்ட கட்டுப்பாடுகளின் மூலம் தொழிற்சாலைகளும் நின்றுவிட்டன. பிரிடிஷ், அமெரிக்க கம்பெனிகள் ஏற்பாடு செய்த முட்டைத் தொழில் சம்பந்தமாக, ஷாங்கே தெருக்களில் பகிரங்கமாகவும் முட்டைகளை ஜப்பானியர்கள் அபகரித்தனர்.

## சமக்ஷேம திட்டம்.

சமக்ஷேமத்திட்டத்தின் பலனை 1940-ம் வருஷம் பிற்பாதியில் ஷாங்கே அனுபவித்தது. பஞ்சத்திலிருந்து சீன ஜனங்களைக் காப்பாற்ற ஆயிரக்கணக்கான டன்கள் எடைமானமுள்ள அரிசியை ரெங்கூனிலிருந்தும், செய்கோனிலிருந்தும், பாங்காக்கிலிருந்தும் நகரசபை இறக்குமதி செய்யும்படி நேரிட்டது. இதற்குமுன் ஷாங்கேயிக்கு அரிசி ஸப்ளை செய்துவந்த யாங்ட்டீஸ் பிரதேசத்திலுள்ள உபரி அரிசியை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ஜப்பானிய சேனை உபயோகமற்ற யென் நாணயங்களைக் கொடுத்து விலைக்கு வாங்கிற்று. இதேமாதிரி நிலக்கரி வியாபாரமும் நடந்தது. சைனாவிலுள்ள நிலக்கரி சுரங்கங்களெல்லாம் ஜப்பானியரின் அமுலுக்குட்பட்டிருந்தன.

சைனாவில் ஜப்பான் கொள்ளையடித்த சாமான்களில் அரிசியும் நிலக்கரியும் யதாம்சம் தான். ஸ்வான்தாரைப் பொருப்படுத்தாமல் வடக்கு, மத்திய சைனாவிலுள்ள ஐச்வர்யங்களை அபகரிக்க உத்தியோக முறையில் கம்பெனிகள் ஸ்தாபிக்கப்பட்டன. மத்திய சைனா அபிவிருத்தி கம்பெனியானது கிளை ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி, இரும்பு, நிலக்கரி, சுரங்கங்கள், இருப்புப்பாதைகள், தந்தி மார்க்கங்கள், உள்நாட்டு நதிப் போக்குவரவு, மோட்டார் ரஸ்தாக்கள், பொதுஜன சாதகங்கள், மீன் பிடிக்கும் பாத்தியதை, பட்டு, முதலியவற்றைக் கொள்ளையடிக்கவும் கூடுமானல் தொழில்களை நடத்தவும் ஏற்பாடு செய்தது. ஜப்பான் கைவசப்படுத்திய இருப்புப்பாதைகளில் ஒன்றுநாங்கிங்கிலிருந்து ஷாங்கேயிக்கும் போகும் பாதை. இதில் பிரிடிஷ் முதலாளிகள் 3 மிலியன் பவுன்கள் முதல் போட்டிருந்தார்கள். மற்றொன்று டியண்ட்ஸிலிருந்து பூகௌவுக்குப் போகும் மார்க்கம். இதிலும் பிரிடிஷார்கள் 3 மிலியன் பவுன்கள் செலவிட்டிருந்தார்கள். இந்த இருப்புப்பாதைகளுக்குப் பாத்தியம் கொண்டாடிய மத்திய சைனா ரெயில்வே கம்பெனி, பிரிடிஷாரின் ஆக்ஷேபனைகளைப் புறக்கணித்துவிட்டு, ஏராளமான லாபம் சம்பாதித்து வந்தது.

### பெர்ல் துறைமுக நிகழ்ச்சிக்குப் பின்.

தூரக்கிழக்கில் யுத்தம் துவங்கினபின் ஷாங்கேயைக் கொள்ளையடிப்பது தாராளமாக நடைபெற்றது. 1941-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 8-ம் தேதியன்று அயல் நாட்டாரின் வாசஸ்தலத்தை ஜப்பானியக் கடற்படையும் ராணுவமும் ஆக்கிரமித்தது. உடன் காலத்திலேயே அங்குள்ள, பெட்ரோல், உலோகம், யந்திரங்கள், தோல், பஞ்சு, ரப்பர், ரசாயனப் பொருள்கள், மருந்துகள், மோட்டார்கள், காகிதம் இவைகளுக்குக் கணக்கு எடுக்கப்பட்டு அவைகள் கைப்பற்றப்பட்டன. எதிரிகளுக்குச் சொந்தமான ஒப்பந்தங்களெல்லாம் வியவகாரங்களை முடிவு கட்டுகிறவர் வசமாயின. சில நடவடிக்கைகள் முடிவடைந்தன. சிலவற்றை ஜப்பானியர் நடத்திவந்தார்கள். சீன தேசீய நாணயங்களுக்குப் பதிலாக, நாணய இருப்பற்ற மத்திய ரிஸர்வ் பாங்க் நோட்டுகள் அச்சிடப்பட்டு இரண்டுக்கு ஒன்று என்ற கணக்கில் சிலாவணிக்கு வந்தன. எதிரி தேசத்தாரின் சொந்த வீடுகளும், கடைக் கட்டடங்களும் ஜப்பானியரால் ஆக்கிரமிக்கப்பட்டன. ஹாங்காங் ஷேங்கே பாங்குக், கட்டடமும், காதே சிற்றுண்டி சாலையும் ஜப்பானியர் வசமாயின. நகர சபையிலுள்ள எதிரி தேசத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் ராஜீனமா செய்யவேண்டியதாயிற்று. நகர சபையில் வேலைசெய்து வந்த பிரிடிஷ் மெம்பர்களும், 100 போலீஸ் உத்தியோகஸ்தர்களும் ராஜீனமா செய்தார்கள், அல்லது வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள்.

### விசாரணை தினம்.

கொள்ளையடிக்கப்பட்ட சைனாவுடன், நேசநாடுகளுடன் செய்த யுத்தத்தினின்றும் தடங்கல்கள் நிவர்த்தியடைந்தபின் ஜப்பான் கொள்ளையடித்த ஹாங்காங், மலேயா, பர்மா, டச்சுக் கிழக்குத் தீவுகள், போர்னியோ, சியாம், பிரெஞ்சு இந்தோ-சைனாவையும் சேர்த்துக் கொண்டால், மொத்தப் பிரதேசமானது ஜெர்மானியர் கொள்ளையிடும் ஐரோப்பாவின் பரப்புக்கும் மதிப்புக்கும் குறைவுபடாதென்றே சொல்லலாம். விசாரணை தினம் கிட்டிவிட்டதென்று ஜப்பானியர்களுக்குத் தெளிவுபடும்படி நாம் அறிவிக்கவேண்டும். சைனாவுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை ஈடுசெய்வதில் சைனாவுடன் நேசதேசத்தார்கள் கலந்து நிற்பார்களென்றும் சீனா அறிந்து கொள்ளவேண்டும்.

---

## "பெண்பால்" (பேனா சிநேகிதன்) யமாடாவிடமிருந்து சின் ராணுவத் தலைமைக் காரியாலயத்துக்கு தபால்காரன் கடிதம் கொண்டுவருகிறான்.

**சின்மலையிலுள்ள சின் ஜாதியார் எல்லோருக்கும்,**

நம் சகோதர சகோதரிகளே, எல்லா சின் ஜாதியினரே,

முழித்து எழுங்கள்! இப்பொழுது தற்போதைய பர்மிய அரசாங்கத்தோடு ஒத்துழைக்க சின்ஜாதியினரான உங்களுக்கு இதுதான் சமயம். உங்களின் சின்மலைகளிலே தங்கியுள்ள பிரிடிஷ் சைனியங்களைத் தாக்குவதற்கு ஜப்பானியத் துருப்புகள் தீர்மானித்துள்ளார்கள். ஆகையால் எங்களுடன் ஒத்துழைக்குமாறு நாங்கள் உங்களுக்கு புத்திசொல்லுகிறோம்.

பிரிடிஷ், அமெரிக்க அரசாங்கங்கள், அவர்கள் சைனியங்களை மிகவும் அதிகமாய் ஹாங்காங், பிலிப்பைன்ஸ், மலேயா, சிங்கப்பூர் முதலிய தேசங்களில் நடந்த யுத்தங்களில் இழந்திருக்கின்றனர் என்பது உங்களுக்குத்தெரியும்.

சின் ஜாதியினரான நீங்கள், ஆசியா, கண்டத்தில் இருப்பதால், எங்களுடன் சேர்ந்து மிகுந்த உணர்ச்சியோடு உங்கள் வேலையைசெய்ய, உடனே எங்களுடன் ஒத்துழையுங்கள்.

யமாடா.

சின்னாட்களுக்கு முன் ஒரு சின் படைப்பகுதியில் ஜப்பானியத் தபால்காரன் கொடுத்த கடிதங்களில் இது ஒன்றாகும். சின் படையின் தலைமைக் காரியாலயங்களுக்கு அடிக்கடி வந்து கடிதங்கள் கொடுக்கும் ஜப்பானியத் தபால்காரனிடமிருந்து சின் படைகள் இதுபோன்றபடி

கடிதங்கள் கணக்கில்லாமல் பெற்றிருக்கின்றனர். உண்மையில் தன் தேசங்களிலுள்ள தம் ஜனங்களிடமிருந்து பெறும் கடிதங்களைவிட மிகவும் அதிகமாகவே சின் தேசப்படைகள் ஜப்பானியரிடமிருந்து கடிதங்களைப் பெறுகிறுர்கள் என்று உத்தியோகஸ்தர்கள் வேடிக்கையாகச் சொல்லுவதும் உண்டு.

### அழகானது.

அழகான இங்கிலீஷ் வார்த்தைகளிலே எழுதப்பட்டிருந்தாலும், இந்தக் கடிதங்கள் எல்லாம், பிரிடிஷ் ஆங்கிலோ, பர்மா உத்தியோகஸ்தர்களை, பர்மாக்காரர்கள் பின்வாங்கிய பிறகு 100 மைல்களுக்கு அப்பால் மலை நாடுகளிலே வைத்துள்ள சின் படைகளை ஜப்பானியர் எப்படி நடத்தப்போகிறுர்கள் என்று பயப்படுத்துவனவாகவே இருந்தது. மற்றைய கடிதங்கள் அன்போடு கூடியதும், மரியாதையானதுமான வார்த்தைகளைக்கொண்டவைகளாகும். உத்தியோகஸ்தர்கள் எல்லாம் அநேகமாய், “மரியாதையோடு கூடிய உத்தியோகஸ்தர்களே” “மரியாதையுள்ள சீமான்களே” என்றுதான் அழைக்கப்படுவார். இவ்வாறு வந்த ஒரு கடிதத்தில் “மரியாதையுள்ள கர்னல் சின் மலையிலிருக்கும் உத்தியோகஸ்தர்” என்று விலாஸம் எழுதப்பட்டிருந்தது.

### கடிதங்கள் அதிகமாகின்றன.

துர்திர்ஷ்ட வசமாய், அந்த கர்னல் சில மாதங்களுக்கு முன்பே, சின் மலையைவிட்டுப் போய்விட்டார். ஆனுல் அவற்றிக்கு அடுத்தாற்போல் வந்த உத்தியோகஸ்தர் அந்த எச்சரிக்கையை மிகுந்த உத்ஸாகத்தோடு வாசித்தார். ஜயத்தோடுகூடிய ஜப்பானிய சேனை மிகுந்த பயங்கரத்தோடு அவன்மேல் தாக்கும் என்பதுதான் அந்த எச்சரிக்கை.

ஜப்பானியக் கடிதங்கள் எழுதுவதில் மிகவும் அதிகமான கடிதங்கள் “யமாடா” என்ற கையெழுத்தோடு “சின்மலையைத் தாக்குவதற்காக, பர்மா எல்லைப்புற ஜப்பானியச் சேனையின் தளகர்த்தன்” என்ற வார்த்தைகளைச் சேர்த்து கையெழுத்திடும் ஒருவனுடைய கடிதங்களேயாகும். இதுவரை யமாடாவின் தாக்குதல்கள் இந்தக் கடிதங்களிலேதான் நடந்து வந்தன.

ஜப்பானியத் தபால்காரன் இக்கடிதங்களை பலவழிகளில் கொடுக்கிறுன். சில சமயங்களில் பிடிபட்ட சின்கள் மலைகளுக்கு அந்தக் கடிதங்களுடனே அனுப்பப்படுகின்றனர். சில சமயங்களில் பர்மியர்கள் அனுப்பப்படுகின்றனர். காலியாக்கப்பட்ட கிராமங்களில் உள்ள வீடுகளில் உள்ள மேஜைகளின் மேல் கடிதங்கள் இருப்பதை வேலை பார்ப்பவர்கள் பார்த்திருக்கின்றனர். மற்றைய கடிதங்கள், ஜப்பானியர்கள், நம்சைனியங்கள் நடமாடும் என்று நினைத்து காட்டுப்பாதைகளில், போட்டு வைக்கப்படுகின்றன. எப்படியும் கடிதங்கள் சரியாய் வந்து சேருகின்றன. சின் வாம்பிலுள்ள உத்தியோகஸ்தர்கள் யமாடாவை “நம் பேனு சிநேகிதன்” என்று அழைக்கின்றனர்.

---

## ஒத்துழைக்காதவர்கள் கால்களில் கட்டப்படுகின்றனர்.

## ஜப்பானியர்கள் பர்மாவில் சாராயம் செய்வதற்கு அரிசி திருடுகிறுர்கள்.

சாராயம் பிழியும் இயந்திரத்தோடும், அச்சாபீஸ்களையும் வைத்து நாட்டை ஆண்டு வரும் ஜப்பானியர்களிடம் பர்மாக்காரர்களுக்கு வெறுப்பு உண்டாகிறது.

ஜப்பானியத் துருப்புகள் போகுமிடங்களிலெல்லாம் அரிசியினுல் செய்யப்படும் சாராயம் பிழிய ஆரம்பித்து விடுகின்றனர். அநேகமாய்ப் பணம் கொடுப்பதில்லை. சிற்சில சமயங்களில் பணம் கொடுக்கும்போது பர்மாக்காரர்களுக்கு பணம் கொடுக்க உபயோகமில்லாத நோட்டுகள் அடிக்க அச்சாபீஸ்களையும் உபயோகப்படுத்துகின்றனர்.

சின்மலையிலுள்ள நம் படைகளுக்கு அன்றுடம் வரும் விஷயங்களிலிருந்து, ஜப்பானியர்கள் தாங்கள் ஜயித்த பர்மியர்களை எவ்வளவு கொடுமையாக நடத்துகின்றனர் என்பது தெரிகிறது.

இந்தியச் சேனை மேற்பார்வையாளர் ஒருவர் இந்த உபயோகமற்ற நோட்டுகளை நான் கட்டுக்கணக்காகப் பார்த்திருக்கிறேன் என்று சொல்லுகிறார். அவைகள் அமெரிக்க டாலர் காகிதங்கள் போலவும், ஓரங்களில் சில ஜப்பானிய வார்த்தைகள் தவிர மற்றவைகள் இங்கிலீஷ் வார்த்தைகளால் அச்சடிக்கப்பட்டும் இருக்கின்றன. இங்கிலீஷ் வார்த்தைகளில் இருப்பது, "ஜப்பானிய அரசாங்கம் ஒரு ரூபாய்" என்றுதான் அதில் ஒரு கோவிலின் உருவப் படமும் அடிக்கப்பட்டு நோட்டுக்கு அழகு செய்யப்பட்டிருக்கிறது. சிற்சில சமயங்களில் மாறுதலுக்காக "ஜப்பானிய அரசாங்கம் ஒரு டாலர்" என்று இங்கிலீஷ் வார்த்தைகளில் அச்சடித்தும், அந்த நோட்டு சுற்றிலும் மாம்பழம் போன்ற படங்களை போட்டும் இருக்கும்.

### பெரிய வீடுகளிலே குடித்துவிட்டு ஆடுகின்றனர்.

பர்மியத்தலைவன் ஒருவன், ஜப்பானியத் துருப்புகள் அவன் கிராமத்தை அணுகுகின்றன் என்பதைத் தெரிந்து கொண்டானானால், உடனே அக்கிராமத்திய ஸ்திரீகள் எல்லோரையும் காட்டிற்குள் அனுப்பிவிடுகிறான். ஜப்பானியர்கள் ஒரு கிராமத்தில் வந்து சேர்ந்தவுடன், கால்நடைகளையும் கோழிக்குஞ்சுகளையும் தின்பதற்கும், அரிசியை பீர்குடிப்பதற்கும் கேட்பது தான் அவர்களின் முதல் செய்கை. பிறகு பெரிய வீடுகளை தங்கள் வசம் எடுத்துக்கொண்டு அங்கு உட்கார்ந்துகொண்டு அநேகமானவர்கள் மயங்கிவிழும் வரையிலும் தின்றுவிட்டு குடித்துக்கொண்டு இருப்பார்கள்.

ஜப்பானியத் துருப்புகள் குடித்திருக்கும் சமயத்தில்தான் பர்மியர்கள் மிகவும் அதிக மாய் அவர்களிடம் பயப்படுகிறார்கள். இதைவிட அதிகமான காட்டுமிராண்டித்தனமாய் இருப்பதை இத்துடன் நிறுத்துவதில்லை.

கிராமங்களில் உள்ள அரிசிகளையெல்லாம் ஜப்பானியர்கள் சாராயம் செய்வதற்கு எடுத் துக்கொள்வதால் கிராமங்கள் எல்லாம் அரிசியின்றி இருக்கின்றன. அநேகமாய் அவர்கள் பிடிக்கும் கால் நடைகள் எல்லாம் உழவுக்குப் பயன்படும் மிருகங்களே ஆகையினால் பர்மியர் கள் தங்கள் வயல்களில் வேலை செய்யமுடியவில்லை.

### அடிமைவேலை பள்ளங்கள் வெட்டுவதற்கு.

"ஆசியாவிலே நடந்து வரும் இந்தப் புதுமுறை"யான ஜப்பானியர்கள் வேண்டிய வற்றையெல்லாம் கொடுக்க மறுப்பவர்களை குதிகளில் கட்டியும், அல்லது மரங்களில் கயிறு களால் கட்டியும் சூரிய வெப்பத்திலே நாட்கள் கணக்காக போடப்படுகின்றனர்.

ஜப்பானியர்கள் பர்மியர்களைப் பள்ளங்கள் வெட்டவும்; படகுகள் தள்ளவும் அடிமைகள் போல் வேலை வாங்குகின்றனர்.

சின்னாட்களாக ஜப்பானிய கவனம் வேறு வழிகளில் சென்றது. ஜப்பானியத் துருப்புகள் பர்மியஸ்திரீகள் அணிந்துகொள்ளும் மேல்சட்டைகளைத் திருடிச்செல்லுகின்றனர். அவைகளை ஜப்பானிலுள்ள தங்களுக்கு நேசமான தாசிகளுக்கு அனுப்புகிறார்கள்.

---

## இருபத்திநாலு விதமான ஸ்திரீ ராணுவ சேவைகள்.

மத்தியக்கிழக்கிலே இன்றையத்தினம் 24 விதமான வெவ்வேறு உடைகளையணிந்த ஸ்திரீ களைக் காணலாம். அவர்கள் வெவ்வேறு ஸ்திரீ ராணுவ சேவை சங்கத்தைச் சேர்ந்தவர்களா கும். நர்ஸுகள், ரகசிய வார்த்தைகளை மொழிபெயர்க்கும் உத்தியோகஸ்தர்கள், குமாஸ் தாக்கள், பிளான் தயார்செய்பவர்கள், மோட்டார் ஓட்டிகள், ஆகிய இவர்களாக தெற்கு ஆபிரிக் கா, நியூஸிலாந்து, இந்தியா, அமெரிக்கா, போலந்து, கிரீஸ், கிரேட் பிரிடன் ஆகிய தேசங் களிலிருந்து வந்து யுத்தத்திற்கு ஸ்திரீகள் வேலை செய்வது யுத்தத்திற்கு ஸ்திரீகள் செய்யும் உதவியை எடுத்துக்காட்டுகிறது.

24 விதமான ஸ்திரீ சேவைகளில் வெளியூரில்போய் உதவியளிக்கும் படையின் வேலை தான் மிகவும் முக்கியமான சேவையாகும். அவைகளைச் செய்வதற்கு உள்ளவர்கள் 100-க்கு

85 ஸ்திரீகள் பாலெஸ்த்தீனத்திலிருந்தும்,ஸைப்ரஸிலிருந்தும், எகிப்திலிருந்தும் மத்தியக்கிழக்குப் பிரதேசங்களுக்கு எடுக்கப்பட்டிருக்கின்றனர். மேல் உத்தியோகங்களுக்கு வந்தபலர் இங்கிலாந்திலிருந்து வந்தவர்களாகும்.

தெற்கு ரொடிஷிய ஸ்திரீ உதவி ராணுவ சேவைதான் ஸ்திரீகள் செய்யும் சேவைகளில் சிறிதானது. மத்தியக்கிழக்கிலே 5 ஸ்திரீகள் ரொடிஷிய சைனியங்கள் உணவுப்பொருள்களை அளிக்கும் பொதுஜன சாலையைவைத்து நடத்துகின்றனர்.

---

# பெவின் பள்ளிக்கூடத்தில் பயிற்சி பெறும் பிள்ளைகள்.

## இந்தியத் தொழிற்சாலைகளுக்குச் சிறந்த வேலைக்காரர்கள்.

இங்கிலாந்தில் பயிற்சி காலம் முடிந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்திருக்கும் பெவின் பயிற்சிசாலையைச் சேர்ந்த பிள்ளைகளின் சராசரி வருமானம் 227 சதவிகிதம் அதிகரித்திருக்கிறதென்று தெரியவருகிறது.

பெவின் திட்டப்படி இங்கிலாந்துக்குச் சென்ற 354 பேர்களில் 203 பேர்கள் இந்தியாவுக்குத் திரும்பி வந்துவிட்டார்கள். பொதுஜனத் தற்காப்பு தொழிற்சாலைகளிலுள்ள டெக்னிகல் வகுப்பைச் சேர்ந்த அலுவல்களில் அநேகர் வேலையில் அமர்ந்துவிட்டார்கள். இதற்குமுன் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 40 முதல் 70 வரையில் ஊதியம் பெற்ற நான்கு பெவின் பிள்ளைகள் இப்பொழுது மாதம் ஒன்றுக்கு ரூ. 445 ஊதியம் பெற்று இந்தியன் எஞ்ஜினியர் படையில் கமிஷன் பெற்ற உத்தியோகம் வகிக்கிறார்கள்.

இந்திய ரெயில்வேயில் ஒருநாளைக்கு ரூ. 2—10—0 சம்பளம் பெற்று வந்த ஒரு ஆயுத வேலைக்காரர் இப்பொழுது மாதம் ஒன்றுக்கு ரூ. 300 சம்பளம் பெற்றுக்கொண்டு கல்கத்தாவிலுள்ள ஆயுத சாலையில் தலைமை அதிகாரியாக யிருக்கிறார். மாதம் ஒன்றுக்கு 70 ரூபாய் சம்பளம் பெற்றுவந்த ஒரு பஞ்சாபிய பிட்டர் இந்தியன் ஸ்டோர்ஸ் இலாகாவில் உதவி இன்ஸ்பெக்டிங் ஆபீஸர் வேலையிலமர்ந்து மாதம் 350 ரூபாய் ஊதியம் பெற்று வருகிறார். மாதம் ரூபாய் 35 சம்பளம் பெற்றுவந்த தகரம், செம்பு வேலை செய்யும் கருமான் இப்பொழுது மாதம் ரூ. 200 பெற்று போர்மென் வேலை பார்க்கிறான்.

### சராசரி வரும்படி அதிகரிப்பு.

பயிற்சி பெற்றுத் திரும்பி வந்தவர்களில் 164 பேர்கள் பீரங்கி தொழிற்சாலைகளிலும் தனிப்பட்ட தொழில் ஸ்தாபனங்களிலும் மேலதிகாரிகளாக வேலையிலமர்ந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 75 முதல் 385 ரூபாய் சம்பளம் பெற்று வருகிறார்கள். டெக்னிகல் பயிற்சி திட்டப்படி ஏற்படுத்தப்பட்ட பயிற்சியளிப்பு நிலயங்களில் உபாத்தியாயர்களாக பெவின் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த 15 பேர்கள் அமர்ந்திருக்கிறார்கள். 16 பேர்கள் சேனையிலும், நான்கு பேர்கள் தொழிற்சாலைகளிலும் டெக்னிஷியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பயிற்சி பெற்றுத் தாயகம் திரும்பிவந்த பெவின் பிள்ளைகளின் சராசரி வருமானம் சில காலத்துக்கு முன் 165 சத விகிதமாக அதிகரித்து இருந்தது. இங்கிலாந்துக்குப் போவதற்கு முன் அவர்களுக்குக் கிடைத்த வருமானத்தைவிட இப்பொழுது அவர்கள் வருமானம் 227 சத விகிதம் அதிகரித்திருக்கிறது. பயிற்சியின் உபயோகத்தை அதிகமாக மதிப்பதிலிருந்தும், உத்தியோகம் கிடைத்தபின் ஊதியம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுவதிலிருந்தும் இந்த வருமான சத விகிதம் அதிகரித்து வருகிறது.

### தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள்.

பெவின் பிள்ளைகளெல்லாம் 20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள். இவர்கள் இந்தியாவிலுள்ள தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். தொழிலாளர் இலாகா மந்திரியான மிஸ்ட்டர் பெவின் திட்டம் இவர்களுக்காகத்தான் ஏற்பாடு செய்யப்பட்டது. பெவின் பள்ளிக்கூடத்தில் பயிற்சிபெற்று பிள்ளைகள் கூட்டம் கூட்டமாகத் திரும்பி வருவதால், இந்தியாவில் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் வகுப்பு அமைக்கப்படுகிறது. இங்கிலாந்திலிருக்கும் பொழுது, பிரிடிஷ் தொழிலாளர்களுடன் பெவின் பிள்ளைகளும் முக்கியமான இஞ்ஜினியரிங் வேலைகளில் பயிற்சி பெறுவதுடன் வியாபாரிகள் சங்கத்தின் முக்கியக் கொள்கைகளையும் தொழிற்சங்கங்கள் ஏற்பட வேண்டிய அவசியத்தையும் நன்கு அறிந்து கொள்ளுகிறார்கள்.

டெக்னிகல் பயிற்சி சாலைகளிலிருந்து வெளியே வரும் வேலைக்காரர்களுடன் பெவின் பிள்ளைகளும் இந்தியாவின் உயர்தர தொழிலாளர்களுக்கு மூலாதாரமாயிருக்கிறார்கள். இவர்கள் யுத்த முயற்சிகளில் ஈடுபடுவதோடு இந்தியாவின் தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்கும் பாடு படுகிறார்கள்.

பயிற்சிகால நீடிப்பு.

பெவின் திட்டப்படி இங்கிலாந்துக்குச் சென்றவர்களுக்கு இது வரையில் 6 மாத காலம் மும்முரமான பயிற்சி அளிக்கப்பட்டது. திரும்பிவந்தவர்களும், சில முதலாளிகளும் வேண்டிக்கொண்டபடி பயிற்சி காலம் 8 மாதத்துக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய திட்டம் 6-வது தொகுதி பெவின் பிள்ளைகளுக்கும் இனிமேல் அனுப்பப்படும் பிள்ளைகளுக்கும் அன்வயிக்கும்.

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 151. (4-வது பிரிவு).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 19- 6-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 23- 6-43 | நார்த்தாமலை | ... மாலை | 7.00 |
| 20- 6-43 | நீர்ப்பழனி | ... ,, | 7.00 | ,, | உப்பிலியக்குடி | ... ,, | 7.30 |
| ,, | ஆலூர் | ... ,, | 7.30 | 24- 6-43 | அண்டக்குளம் | ... ,, | 7.00 |
| 21- 6-43 | காரையூர் | ... ,, | 7.00 | ,, | கிள்ளனூர் | ... ,, | 7.30 |
| ,, | இடையாத்தூர் | ... ,, | 7.30 | 25- 5-43 | கொன்னையூர் | ... ,, | 7.00 |
| 22- 6-43 | வடவாளம் | ... ,, | 7.00 | ,, | மேலவேகுப்பட்டி | ... ,, | 7.30 |
| ,, | செம்மட்டிவிடுதி | ... ,, | 7.30 | | | | |

### பிரஸங்கம் 152. (5-வது பிரிவு.)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 26- 6-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை | 6.00 | 30- 6-43 | பொ. புதுப்பட்டி | ... மாலை | 7.00 |
| 27- 6-43 | ஆலங்குடி | ... ,, | 7.00 | ,, | வேந்தம்பட்டி | ... ,, | 7.30 |
| ,, | ராசியமங்கலம் | ... ,, | 7.30 | 1- 7-43 | வெள்ளனூர் | ... ,, | 7.00 |
| 28- 6-43 | திருமயம் | ... ,, | 7.00 | ,, | செம்பாட்டூர் | ... ,, | 7.30 |
| ,, | மேலூர் | ... ,, | 7.30 | 2- 7-43 | புலியூர் | ... ,, | 7.00 |
| 29- 6-43 | பள்ளிவாசல் | ... ,, | 7.00 | ,, | கண்ணங்குடி | ... ,, | 7.30 |
| ,, | பில்லமங்கலம் | ... ,, | 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 19—6—43 | பொன்னமராவதி. | 26—6—43 | திருமயம். |
| 20—6—43 | மருதன்கோன்விடுதி. | 27—6—43 | ஏம்பல். |
| 21—6—43 | அரிமளம். | 28—6—43 | முள்ளங்குரிச்சி. |
| 22—6—43 | பேராம்பூர். | 29—6—43 | கோனாபட்டு. |
| 23—6—43 | கரம்பக்குடி. | 30—6—43 | கீழாநிலை புதுப்பட்டி. |
| 24—6—43 | கீழாநிலை. | 1—7—43 | ஆலங்குடி. |
| 25—6—43 | புதுக்கோட்டை. | 2—7—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—22-6-43.